# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி - மார்கழி - (2012 சூலை - திசம்பர்)

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 9**

வெளியீடு: திசம்பர் 2020



# செம்மொழி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 9
திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி - மார்கழி (2012சூலை - திசம்பர்) வெளியீடு: திசம்பர் 2020

## பொருள் நிரல்

வாழ்த்துரை ........................................... 1
முதன்மை ஆசிரியர் உரை ........................ 2
கருத்தரங்குகள் ......................................... 3
பழந்தமிழ்ச் சொல்லமைப்பு - பேராசிரியர் சி. இலக்குவனார் ............. 11
பயிலரங்குகள் ........................................ 16
கூட்டங்கள் ............................................ 24
தொல்லியல் செய்தி - வரலாற்றுக்கு முந்தைய வெள்ளரிக்கொம்பை பாறை ஓவியங்கள் ..................................... 28
தென் அராபிய ஓமனில் தமிழி எழுத்துப் பொறித்த பானை ஓடு ........................ 29
2008-09ஆம் ஆண்டுக்கான குடியரசுத் தலைவர் விருது .................. 31

முதன்மை ஆசிரியர்
பேராசிரியர் இரா. சந்திரசேகரன்

ஆசிரியர் குழு
முனைவர் அ. ஆரோக்கியதாசு
முனைவர் த. சரவணன்

தொழில்நுட்பம்
திரு. த. செந்தில்குமார்

வடிவமைப்பு
திரு. க. சங்கர்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் அடிப்படையாகக்கொண்டு பத்துச் செயல்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றது.

- 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
- பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்தல்
- செம்மொழித் தமிழின் மொழி, இலக்கியம், தொல்லியல், கட்டடக்கலை முதலியவை சார்ந்த காட்சிக் குறும்படங்களை உருவாக்கல்
- இணையவழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
- வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
- வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
- செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
- பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
- இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
- செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, நூறடிச்சாலை, தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி: 044-22540125 மின்னஞ்சல்: chemmozhi@cict.in இணையம்: www.cict.in

# வாழ்த்துரை



சங்கத்தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தனர். இயற்கையை மறந்ததனால் இவ் உலகம் இன்று எவ்வளவு இடர்களைச் சந்தித்து வருகிறது என்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம். இவ்வுலகம் மனிதனுக்கு மட்டும் ஆனதன்று. அனைத்து உயிர்களுக்குமானதாகும். எனவேதான் சங்கத்தமிழர்கள் மானுடநேயர்களாக மட்டுமல்லாமல் உயிர்நேயர்களாகவும் வாழ்ந்துள்ளனர். நம் சங்க இலக்கியங்கள், செடி, கொடி, புல், மரம், விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களையும் பதிவு செய்துள்ளன. ஐந்திணைப் பாகுபாடும் ஐந்திணைகளுக்கான கருப்பொருட்கள் வகுப்பும் சங்கத்தமிழரின் இயற்கை நெறியை விளக்குகின்றன. இவ்வுலகில் அனைத்து உயிரினங்களும் தோன்றியபின்பு கடைசியாகத் தோன்றியதே மனித இனம். இதை நன்குணர்ந்த பழந்தமிழர்கள் இயற்கையைப் போற்றினர்.

**'நரந்த நறும்புல் மேய்ந்த கவரி'** (புறம்.132-4)

**'பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்'** (பதிற்.11)

என நரந்தம்புல்லை மான் உண்ட செய்தியையும்

**'எருவை நீடிய பெருவரையகம்'** (நற்.294)

எனக் கோரைப்புல் பற்றியும் 'கழை' (பெரும்.257), 'வேய்' (புறம்.32), 'பணை' (குருந்.326) என மூங்கிலைப் பற்றியும் பதிவு செய்கின்றன. இதுபோல் 'முதிர்கறி யாப்பின்' (நற்.297), 'கறி வளர் சாந்தம் ஏறல் செல்லாது'(அகம்.2), 'கறி வளர் அடுக்கத்து மலர்ந்த காந்தள்' (புறம்.168) எனக் கொடிகளையும் எடுத்துரைக்கின்றன. மேலும் மரங்கள், மலர்கள், செடிகள், விலங்குகள், பூச்சிகள், வண்டுகள் என அனைத்துயிர்களையும் சங்கப்புலவர்கள் பாடியுள்ளனர். தமிழ்மொழியே ஓர் இயற்கை மொழியாக அமைந்திருப்பது கூடுதல் சிறப்பு.

இச் செம்மொழிச் செய்திமடலில் பேராசிரியர் சி. இலக்குவனாரின் பழந்தமிழ்ச் சொல்லமைப்பு எனும் சிறப்பான கட்டுரை அமையப் பெற்றிருக்கிறது. இக்கட்டுரையில் தமிழ் மொழியின் தன்மைகளைப் பற்றிச் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. அதுபோல் பரிதிமாற்கலைஞர் மறைவிற்கு ம.கோபாலகிருஷ்ண ஐயர் பிரிவாற்றாது பாடிய பாவும் அமையப்பெற்றுள்ளது. வெள்ளரிக்கொம்பைப் பாறை ஓவியங்கள் பற்றிய செய்திகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், பணியரங்குகள் பற்றிய செய்திகள் என மிகச்சிறப்பாய் அமைக்கப்பெற்ற இச்செம்மொழிச் செய்திமடல்-9, வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மேலும் செம்மொழிச் செய்திமடல் தொடர்ந்து வெளிவர உழைக்கும் அனைவருக்கும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(தெ.ஞானசுந்தரம்)
துணைத்தலைவர்

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது (குறள்-16)

# முதன்மை ஆசிரியர் உரை



உலகின் மூத்தமொழி தமிழ் என்பதற்கும் மூத்த குடி தமிழ்க்குடி என்பதற்கும் ஏராளமான சான்றுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. தென்னிந்தியா ஒன்றரை லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே நிலப்பகுதியாக விளங்கியது என நிலவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழர் நாகரிகம் ஸ்பெயின், கிரேக்கம் வரை பரவியுள்ளதாக ஹீராஸ் பாதிரியார் குறிப்பிடுகிறார். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த லேப்ரஸ் என்றழைக்கப்படும் சுவடியில், கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற வணிக ஒப்பந்தம் ஒன்று எகிப்தில் கிடைத்துள்ளது. அது ஆஸ்திரியா நாட்டுத் தலைநகரமான வியன்னா அருங்காட்சியகத்தில் உள்ளது. அவ் வணிக ஒப்பந்தத்தில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களைப் பற்றியும் அப்பொருட்கள் அலெக்ஸாண்டிரியா செல்லவேண்டிய முறைகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது. பழந்தமிழர்கள் ரோம நாட்டோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை இவ் ஒப்பந்தம் மெய்ப்பிக்கிறது.

பழந்தமிழர்களிடையே வாணிகமும் தொழிலும் சிறப்புப் பெற்றிருந்தன என்பதற்குப் பின்வரும் சங்கப் புலவர்களின் பெயர்களே சான்றுகளாக அமைகின்றன. மதுரைப் பண்டவாணிகன், இளந்தேவனார், உறையூர் இளம் பொன் வாணிகனார், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், கணக்காயன் தத்தத்தனார், கணியன் பூங்குன்றனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், கச்சுப்பேட்டு இளந்தஞ்சனார், மதுரைக் கொல்லன் புல்லன், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் போன்றவை சில காட்டுகள்.

இத்தகைய சிறப்புமிக்க பழந்தமிழர் பண்பாட்டையும் வாழ்வியலையும் தொன்மையையும் தனித்தன்மையையும் இலக்கியம், மொழியியல், மொழிபெயர்ப்பு, அகராதியியல், மொழிகள் - மொழிக்கல்வி, வரலாறு, சமூகவியல், மானுடவியல், தொல்லியல், சுவடியியல், கல்வெட்டியல், நாணயவியல், கலை, கட்டடவியல், அயலகத் தமிழ்ப்புலம், மொழித் தொழில்நுட்பப் புலம் ஆகிய துறைகளின் வாயிலாகப் பல்துறைசார் தமிழாய்வுகளைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. மேலும் பல்வேறு சேவைப் பிரிவுகளின்வழித் தமிழாய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் சேவையாற்றி வருகிறது. இந்நிலையில், 2012ஆம் ஆண்டு ஜூலை முதல் திசம்பர் வரையிலான அரையாண்டுக் காலத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையும் நிறுவனம் ஆற்றிய தமிழ்ப் பணிகளையும் பதிவுசெய்து இச்செம்மொழிச் செய்திமடல்-9, வெளிவருவதில் பெருமிதம் கொள்கிறேன். வாழ்த்துகிறேன்.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

(இரா. சந்திரசேகரன்)
இயக்குநர்

# கருத்தரங்குகள்

கருத்தரங்கம் 1

## தொல்காப்பிய மொழியியல்




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வாலாஜாப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரியும் இணைந்து ‘தொல்காப்பிய மொழியியல்’ என்னும் பொருண்மையில் 29.10.2012 முதல் 31.10.2012 வரையிலான மூன்று நாள்களில் கருத்தரங்கினை நடத்தின.

இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழா 29.10.2012 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது. கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் ச.கௌ. கவிதா வரவேற்புரையும் அறிமுகவுரையும் நிகழ்த்தினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் செல்வி வே.ந. சாரதாமணி தலைமையுரை வழங்கினார். பேராசிரியர் சா. வளவன் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர், தமிழ் மொழியின் தொன்மையையும் பெருமைகளையும் எடுத்துக் கூறினார். மேலும், தொல்காப்பியத்தின் சிறப்புக்களையும் சொல்வளத்தையும் இன்றைய வாழ்வியல் விழுமியங்களோடு பொருத்திக் காட்டி விளக்கினார்.

தமிழ்த்துறையின் முன்னாள் பேராசிரியர் வசந்தா கல்யாணசுந்தரம், முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா. காந்தலக்குமி, சென்னைக் காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக்கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹம்ரோஸியா பேகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வி. அநுராதா தொடக்க விழா நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். செல்வி பா. தாயாரம்மாள் நன்றிகூறத் தொடக்கவிழா நிறைவடைந்தது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**பேராசிரியர் சா. வளவன்**
**பேராசிரியர் பத்மநாபப் பிள்ளை**
**முனைவர் க. இரவிசங்கர்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**முனைவர் தனலட்சுமி**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**முனைவர் கி. சிவக்குமார்**
**பேராசிரியர் இரா. செயராமன்**
**பேராசிரியர் அ.ஜோ. தியோடர் ராஜ்குமார்**
**முனைவர் கே. பழனிவேல்**
**முனைவர் ஜான் மனுவேல்**
**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**
**முனைவர் தெ. ஞானசுந்தரம்**
**திருமிகு விஜயகாந்தி**
**முனைவர் ஏ. யோகசித்ரா**
**செல்வி வே. காயத்திரி**

31.10.2012 அன்று மாலை கருத்தரங்கின் நிறைவு விழா நடந்தது. இதில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் ச.கௌ. கவிதா அனைவரையும் வரவேற்றார். பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர், இலக்கணத் துறையிலும் மொழியியல் துறையிலும் மாணவர்கள் ஆர்வம் காட்டவேண்டும் என்றும் அத்துறைகளில் செய்ய வேண்டிய ஆய்வுகள் மிகுதியாக உள்ளன என்றும் தமிழ்மொழியினை உலக மொழிகளோடு ஒப்பிட்டுப் புதிய நோக்கில் ஆய்வுகள் வளர வேண்டுமென்றும் குறிப்பிட்டார். கல்லூரியின் முதல்வர் வே.ந. சாரதாமணி தலைமையுரை வழங்கினார். வேலூர் முத்துரங்கம் அரசுக் கலைக்கல்லூரியின் முதல்வர் முனைவர் க. மாலதி, அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரி இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் பியாட்ரிஸ் மார்கரெட், விலங்கியல் துறைத்தலைவர் முனைவர் மு. இரமாபாய் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஜா. வளர்மதி நிறைவு விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியருமான ச.கௌ. கவிதா நன்றியுரை வழங்கினார்.

★

கருத்தரங்கம் 2

## மரபுவழி மற்றும் மொழியியல் நோக்கில் செவ்வியல் இலக்கணங்களைக் கற்பித்தல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் செயங்கொண்டசோழபுரம் ஸ்ரீலெட்சுமி கல்வியியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து ‘மரபுவழி மற்றும் மொழியியல் நோக்கில் செவ்வியல் இலக்கணங்களைக் கற்பித்தல்’ என்னும் தலைப்பில் 19.11.2012 முதல் 21.11.2012 வரையிலான மூன்று நாள்கள் தேசியக் கருத்தரங்கினை நடத்தின. இதன் ஒருங்கிணைப்பாளராகக் கே.கே.சி. கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் சி. பழநியாண்டி விளங்கினார். இவருக்கு உறுதுணையாகத் தமிழ் விரிவுரையாளர் கே. தனபாலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. சிவபெருமானும் பணியாற்றினார்கள்.

இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழா 19.11.2012 அன்று காலை தொடங்கியது. ஸ்ரீலெட்சுமி கல்வியியல் கல்லூரியின் முதல்வர் எஸ். விஜயா வரவேற்பு ரையாற்றினார். கே.கே.சி. கல்வி நிறுவனச் செயலர் ஆர். லெட்சுமிகாந்தம் முன்னிலை வகித்துக் குத்துவிளக்கு ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார். க.சொ.க. பாலிடெக்னிக் கல்லூரித் தலைவர் க.சொ.க. கண்ணன் தலைமையுரையாற்றினார். சிதம்பரம் மௌன மடாலய அதிபர் தவத்திரு மௌனசுந்தரமூர்த்தி சுவாமிகள் தொடக்க விழாச் சிறப்புரையாற்றினார்.






இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

பேராசிரியர் அ. சிவபெருமான்
பேராசிரியர் செ.வை. சண்முகம்
முனைவர் சு. மாதவன்
முனைவர் ஆ.கோ. நடராசன்
முனைவர் எம். சிவசண்முகம்
முனைவர் கோ. தங்கையன்
முனைவர் பி. சந்திரமோகன்
திரு க.சொ.க. கண்ணன்
பேராசிரியர் பூவை.சு. செயராமன்
முனைவர் கே. விசுவநாதன்
முனைவர் கோ. சதீஸ்
திரு நா. அசோக்குமார்
முனைவர் வ. குருநாதன்
முனைவர் அரங்க. பாரி
முனைவர் க. அன்பழகன்
புலவர் அ. வைத்தியலிங்கம்
முனைவர் ச. ஈசுவரன்
முனைவர் வி. கீதா
முனைவர் ஆர். சரண்யா
திரு கே.கே.சி. செந்தில்குமார்
முனைவர் யாழ் சு. சந்திரா
முனைவர் இரா. துரை
திரு ச. மெய்ஞ்ஞானசேகர்
முனைவர் தெ. முருகசாமி
முனைவர் அ. அறிவுநம்பி
முனைவர் இ. இலட்சாராமன்
முனைவர் சி. பழனியாண்டி

21.11.2012 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் கே.கே.சி கல்வி நிறுவனத் தலைவர் கே.கே.சின்னப்பன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். திருச்சி சமால் முகமது கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் த. செல்வராசு கருத்தரங்க மதிப்பீட்டுரை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் கருப்புசாமி கருத்தரங்கில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிப் பேசினார்.

★

கருத்தரங்கம் 3

## தமிழ்ச் செவ்வியல் இலக்கியம் காட்டும் விழுமியங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையுடன் திருச்சிராப்பள்ளித் தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரித் தமிழாய்வுத் துறை ‘தமிழ்ச் செவ்வியல் இலக்கியம் காட்டும் விழுமியங்கள்’ என்னும் தலைப்பில் 28.11.2012 முதல் 30.11.2012 முடிய மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தியது.

முனைவர் நா. தனராசன்
முனைவர் அ. ஆலிஸ்
முனைவர் இரமேஷ் சாமியப்பா
முனைவர் ப. வெங்கடேசன்
பேராசிரியர் வ. முகம்மது யூனுஸ்
முனைவர் பொன். புஷ்பராஜ்
முனைவர் ச. ஈஸ்வரன்
முனைவர் க. திலகவதி
முனைவர் சி. சுந்தரேசன்
பேராசிரியர் இ. சூசை
முனைவர் சி.அ. இராசராசன்
முனைவர் கு.ஆ. இராசாராம்
முனைவர் சு. தமிழ்வேல்

ஆகிய அறிஞர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.






★

கருத்தரங்கம் 4

# தொல்காப்பியம் - எழுத்தும் சொல்லும் மரபுப் பார்வையும் மொழியியல் பார்வையும்




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பியம் - எழுத்தும் சொல்லும்: மரபுப் பார்வையும் மொழியியல் பார்வையும்' என்னும் பொருண்மையில் 28.11.2012 முதல் 30.11.2012 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தின.

இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழா 28.22.2012 அன்று காலை 11 மணியளவில் தொடங்கியது. இதில் எத்திராஜ் மகளிர் கல்லூரி இணைப்பேராசிரியர் முனைவர் கு. மங்கையர்க்கரசி அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் ஜோதிகுமரவேல் முன்னிலை யுரையாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் எம். நித்யகல்யாணி நோக்கவுரை வழங்கினார். கல்லூரியின் நிர்வாகக் குழுத் தலைவர் முனைவர் அ.மு. சுவாமிநாதன் இ.ஆ.ப.(ஓய்வு) தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு வாழ்த்துரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி சிறப்புரையாற்றினார். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் த. வசந்தாள் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

முனைவர் இரா. சீனிவாசன்
பேராசிரியர் செ.வை. சண்முகம்
பேராசிரியர் ச. குருசாமி
பேராசிரியர் இராதா. செல்லப்பன்
முனைவர் அன்னிதாமசு
பேராசிரியர் ச. திருஞானசம்பந்தன்
முனைவர் வா.மு.சே. ஆண்டவர்
முனைவர் இரா. இராஜலட்சுமி
மகாவித்துவான் வே. சிவசுப்பிரமணியன்
பேராசிரியர் இரா. கோதண்டராமன்
பேராசிரியர் ப. மருதநாயகம்
முனைவர் ஈ. அன்னக்கிளி
முனைவர் இரா. ஜெகதீசன்
முனைவர் த. வசந்தாள்
முனைவர் வ.ச. அபிராமவல்லி
முனைவர் ம. இளங்கோவன்
முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் தா. நீலகண்டப்பிள்ளை
முனைவர் தா.எ. ஐசக் சாமுவேல் நாயகம்
முனைவர் வே. சீதாலட்சுமி



30.11.2012 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் அரங்க. மல்லிகா வரவேற்புரையாற்றினார். எத்திராஜ் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் ஜோதி குமரவேல் முன்னிலையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தலைமையுரையாற்றினார். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் சியாமளா கனகராஜ் வாழ்த்துரை வழங்கினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் விழாப் பேருரை நிகழ்த்தினார். பங்கேற்பாளர் சார்பாக முனைவர் எழிலரசி பாலசுப்பிரமணியன் கருத்தரங்கின் பயன்பாடு குறித்துப் பேசினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் எம். நித்தியகல்யாணி நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

கருத்தரங்கம் 5

# இரட்டைக் காப்பியங்களில் மெய்யியல் சிந்தனைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து 'இரட்டைக் காப்பியங்களில் மெய்யியல் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் 2012 திசம்பர் 11, 12, 13 ஆகிய நாள்களில் தேசியக் கருத்தரங்கினைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக் கூடத்தில் நடத்தின.

இக் கருத்தரங்கின் தொடக்க விழா 11.12.2012 அன்று காலை 10.30 மணியளவில் நடந்தது. இதில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. காமராசு வரவேற்புரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ம. திருமலை தலைமையுரையாற்றினார். கருத்தரங்கின் மையக் கருத்துரையை மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர்

ந. முத்துமோகன் வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலத்தலைவர் முனைவர் வ. குருநாதன் வாழ்த்துரை வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் க. திலகவதி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். இலக்கியத்துறை உதவிப் பேராசிரியர் அ. இரவிச்சந்திரன் நன்றிநவிலத் தொடக்க விழா நிறைவுற்றது.

இக்கருத்தரங்கில் கீழ்வரும் ஆய்வறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**பேராசிரியர் நா. கருணாமூர்த்தி**
**பேராசிரியர் க. அன்பழகன்**
**பேராசிரியர் நா. தனரசன்**
**பேராசிரியர் பீ.மு. மன்சூர்**
**பேராசிரியர் சி. தியாகராசன்**
**பேராசிரியர் து. சீனிச்சாமி**
**பேராசிரியர் உ. கருப்பத்தேவன்**
**திரு க. காமராசன்**
**பேராசிரியர் எஸ். தோதாத்திரி**
**பேராசிரியர் உ. அலிபாவா**
**முனைவர் யாழ் சு. சந்திரா**
**பேராசிரியர் வ. குருநாதன்**
**முனைவர் செ. இரவிசங்கர்**
**பேராசிரியர் தா. ஈசுவரப்பிள்ளை**
**பேராசிரியர் நா. இராமச்சந்திரன்**
**பேராசிரியர் பா. ஆனந்தகுமார்**
**பேராசிரியர் க. நெடுஞ்செழியன்**
**எழுத்தாளர் ஆட்டனத்தி**
**முனைவர் அ. இரவிச்சந்திரன்**
**பேராசிரியர் தி.சு. நடராசன்**
**பேராசிரியர் முப்பால்மணி**
**பேராசிரியர் முகிலை இராசபாண்டியன்**
**முனைவர் இரா. காமராசு**
**பேராசிரியர் இரா. காசிராசன்**
**முனைவர் இராம. பாண்டுரங்கன்**
**ஆய்வறிஞர் பொ. வேல்சாமி**
**முனைவர் சொ. சேதுபதி**
**பேராசிரியர் அ. ஆலிஸ்**
**முனைவர் பத்மாவதி விவேகானந்தன்**
**முனைவர் கோ.ப. நல்லசிவம்**

13.12.2012 அன்று மாலை 3.30 மணியளவில் கருத்தரங்கின் நிறைவு விழா தொடங்கியது. இதில் இலக்கியத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க. திலகவதி வரவேற்புரையாற்றினார். மொழிப்புலத் தலைவர் பேராசிரியர் வ. குருநாதன் முன்னிலையில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ம. ஜெகதீசன் தலைமையுரையாற்றினார். உலகச் செம்மொழிகள் உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் சோ.ந. கந்தசாமி கருத்தரங்கில் கலந்துகொண்ட பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுப் பேருரையாற்றினார். இலக்கியத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ. இரவிச்சந்திரன் தொகுப்புரை வழங்கினார். இறுதியாக கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. காமராசு நன்றிகூறக் கருத்தரங்கம் இனிதே நிறைவடைந்தது.

★

**கருத்தரங்கம் 6**

## எட்டுத்தொகை அக இலக்கியங்களில் தொல்காப்பியச் செய்யுளியல் மரபுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரித் தமிழ்த்துறை ‘எட்டுத்தொகை அக இலக்கியங்களில் தொல்காப்பியச் செய்யுளியல் மரபுகள்’ என்னும் பொருண்மையில் 12.12.2012 முதல் 14.12.2012 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தியது.

இக்கருத்தரங்கத்தின் தொடக்க விழா 12.12.2012 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் வே. கட்டளைக் கைலாசம் வரவேற்புரை நிகழ்த்தினார். ம.தி.தா. இந்துக்கல்லூரிக் கல்விச் சங்கப் பொருளாளர் தளவாய் தீ. இராமசாமி தலைமையேற்றார். ம.தி.தா. இந்துக்கல்லூரிக் கல்விச் சங்கச் செயலர் மு. செல்லையா, ஆட்சிக்குழு உறுப்பினர் பி.டி. சிதம்பரம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத்தலைவர் முனைவர் சு. அழகேசன், ம.தி.தா. இந்துக்கல்லூரி முதல்வர் முனைவர் பி. சின்னதம்பி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் ச.வே. சுப்பிரமணியன் சிறப்புரை நிகழ்த்தினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோ. சங்கரவீரபத்திரன் நன்றி கூறத் தொடக்க விழா நிறைவுற்றது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**முனைவர் ஆ. செல்லப்பா**
**முனைவர் நெல்லை க. சொக்கலிங்கம்**





பேராசிரியர் அ. பிச்சை
பேராசிரியர் முகிலை இராசபாண்டியன்
முனைவர் க. முருகேசன்
முனைவர் சேதுபாண்டியன்
முனைவர் தா. நீலகண்டப்பிள்ளை
முனைவர் பி. தட்சிணாமூர்த்தி
பேராசிரியர் பா. ஆனந்தகுமார்
முனைவர் சு. சந்திரா
முனைவர் எஸ். இரவி
முனைவர் பி. பகவதி
பேராசிரியர் இராமச்சந்திரன்
முனைவர் அ. சுந்தரம்
முனைவர் நா. உசாதேவி
முனைவர் அ. பழனிக்குமார்
முனைவர் மா. கருணாகரன்
முனைவர் வீரா. அழகிரிசாமி
பேராசிரியர் ம.சா. அறிவுடைநம்பி
முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் ஆர். இரந்தீர்குமார்
முனைவர் கு. ஞானசம்பந்தன்

14.12.2012 அன்று மாலை 4 மணியளவில் நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் வே. கட்டளைக் கைலாசம் வரவேற்புரையாற்றினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் தமிழியல் துறைத்தலைவர் முனைவர் தொ. பரமசிவன் நிறைவு விழாப் பேருரை நிகழ்த்தினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோ. சங்கரவீரபத்திரன் நன்றிநவின்றார்.

★

கருத்தரங்கம் 7

## சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழலியல், பண்பாட்டியல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் விருதுநகர் வே.வ. வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழலியல், பண்பாட்டியல்' என்னும் தலைப்பில் 12.12.2012 முதல் 14.12.2012 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின.





இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழா 12.12.2012 அன்று காலை 9.30 மணியளவில் தொடங்கியது. இதில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச. பாரிஜாதம் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பி. செல்வமீனாட்சி தலைமை தாங்கினார். வே.வ. வன்னியப்பெருமாள் மகளிர் கல்லூரி நிர்வாகக் குழுவினர்களான முனைவர் சி.எஸ். இராஜேந்திரன், சி.பி.கே. பழனீஸ்வரி, எஸ்.எஸ்.எஸ்.எம்.எஸ். மாணிக்கவாசகம், வி.என்.எம்.எஸ்.ஏ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மதுரை காமராசர் பல்கலைக்கழக மேனாள் மொழியியற் புலத்தலைவர் ஏ. ஆதித்தன் கருத்தரங்கச் சிறப்புரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் பின்வரும் ஆய்வறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

முனைவர் ம. சரோஜா
முனைவர் இரா. இளவரசு
முனைவர் உ. கருப்பத்தேவன்
முனைவர் வீ. மோகன்
முனைவர் முத்துச்சந்தானம்
முனைவர் ச. கண்மணி
முனைவர் மு. பெர்னாட்ஷா
முனைவர் பா. வேலம்மாள்
முனைவர் சி. கமலி
முனைவர் இரா. சுகந்தி ஞானம்மாள்
முனைவர் சு. அழகர்நாதன்
முனைவர் நா. கருணாமூர்த்தி
முனைவர் ஸ்ரீதர்
முனைவர் சு. வினோத்
பேராசிரியர் து. சேதுபாண்டியன்
பேராசிரியர் பா. ஆனந்தகுமார்
முனைவர் செந்தில்குமார்
முனைவர் மு. கண்ணன்

14.12.2012 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் முனைவர் பா. நாகஜோதி வரவேற்புரையாற்றினார். வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரிச் செயலாளர் எஸ்.எஸ்.எஸ்.எம்.எஸ். மாணிக்க வாசகம் தலைமை தாங்கினார். புதுச்சேரி பாரதிதாசன் மகளிர் கலைக்கல்லூரி இணைப்பேராசிரியர் சொ. சேதுபதி சிறப்புரையாற்றினார். முனைவர் தே. பிரியா நன்றிகூற விழா இனிதே நிறைவடைந்தது.

★

# திருக்குறளில் இலக்கிய உத்திகள்



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஜெயங்கொண்டம் மாடர்ன் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'திருக்குறளில் இலக்கிய உத்திகள்' என்னும் பொருண்மையில் 2012 திசம்பர் 17, 18, 19 ஆகிய நாள்களில் தேசியக் கருத்தரங்கினைப் பழனீஸ்வரி கலையரங்கில் நடத்தின.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 17.12.2012 அன்று காலை 9.30 மணியளவில் தொடங்கியது. மாடர்ன் கல்வியியல் கல்லூரி முதல்வர் செ. திருவள்ளுவன் விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் வரவேற்றார். மாடர்ன் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் சி. மகராசன் தலைமை தாங்கினார். மாடர்ன் கல்விக் குழு நிறுவனத் தலைவர் சொ. பழனிவேல், துணைத்தலைவர் எம்.கே.ஆர். சுரேஷ் ஆகியோர் முன்னிலை ஏற்றனர். மைசூர்ப் பல்கலைக்கழக முன்னைத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் தங்க. மணியன் வாழ்த்துரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி கருத்தரங்க அறிமுகவுரையாற்றினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பொற்கோ சிறப்புரையாற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் இரா. கற்பகவள்ளி நன்றி நவிலத் தொடக்க விழா நிறைவுற்றது.

இந்தக் கருத்தரங்கில் கீழ்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

பேராசிரியர் க. இராமசாமி
முனைவர் அ. கருணாநிதி
முனைவர் மு. சிவச்சந்திரன்
முனைவர் த. அகரமுதல்வன்
முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி
முனைவர் உ. பிரபாகரன்
முனைவர் பா. சிவனேசன்
முனைவர் ப. கோடித்துரை
பேராசிரியர் செ. எழில்வளவன்
முனைவர் சே. கரும்பாயிரம்
திரு சி. பன்னீர்செல்வம்
முனைவர் சி. மனோகரன்
முனைவர் சா. சிற்றரசு
முனைவர் க. துரையரசன்
பேராசிரியர் பூவை சு. செயராமன்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் மு. செல்வதுரை
முனைவர் ச. காளிமுத்து
முனைவர் அ. கணேசன்
பேராசிரியர் ச.க. கொளஞ்சிநாதன்
திரு அ. இறைக்கோ
முனைவர் சொ. சசிக்குமார்
முனைவர் கோ. இளங்கோ
முனைவர் வீ. பொய்யாமணி
முனைவர் கோ. சதீஸ்
முனைவர் அ. சிவபெருமான்
புலவர் அ. வைத்திலிங்கம்
முனைவர் சு. தமிழ்வேல்
திரு தி. பாலமுருகன்
முனைவர் மு. விஜயகுமார்
முனைவர் சி. வடிவேலன்
முனைவர் இரா. நடராசன்
திரு செ. திருவள்ளுவன்
திரு நா. இரஞ்சித்
திரு ஸ்டாலின்




இக்கருத்தரங்கின் நிறைவு விழா 19.12.2012 அன்று மாலை நடைபெற்றது. மாடர்ன் கல்வியியல் கல்லூரி முதல்வர் செ. திருவள்ளுவன் வரவேற்புரையாற்றினார். மாடர்ன் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் சி. மகராசன் தலைமை தாங்கினார். மாடர்ன் கல்வி நிறுவனத் துணைத்தலைவர் எம்.கே.ஆர். சுரேஷ் முன்னிலையேற்றார். திண்டிவனம் சரஸ்வதி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் அ.ம. சத்தியமூர்த்தி கருத்தரங்க மதிப்புரை வழங்கினார். அரியலூர் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் வீ. பொய்யாமணி கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். தமிழ்த் துறைத்தலைவர் இரா. கற்பகவள்ளி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். இறுதியாகக் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் கோ. இளங்கோ நன்றிகூற விழா இனிதே நிறைவடைந்தது.

★

கருத்தரங்கம் 9

# பண்பாட்டியல், சமுதாயவியல், நிலவியல் பார்வையில் ஆற்றுப்படை இலக்கியங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழகச் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலமும் இணைந்து 'பண்பாட்டியல், சமுதாயவியல், நிலவியல் பார்வையில் ஆற்றுப்படை இலக்கியங்கள்' என்ற தலைப்பில் 2012 திசம்பர் 19, 20, 21 ஆகிய நாள்களில் தேசியக் கருத்தரங்கினை நடத்தின.

கருத்தரங்கத் தொடக்க விழா 19.12.2012 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது. பேராசிரியர் அ. அறிவுநம்பி வரவேற்புரையாற்றினார். பிரெஞ்சு ஆசிய ஆய்வியல் நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கோ. விசயவேணுகோபால் தொடக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி மையவுரையாற்றினார். அவ்வுரையில் அவர், சங்க இலக்கியத்தை எவ்வாறு அணுகுவது என அண்மையில் ஐயப்பப் பணிக்கர் சில கருத்துக்களைக் கூறியுள்ளார். அதன் அடிப்படையில் சுற்றுப்புற அழகியல் நோக்கில் இலக்கியங்களை ஆராய வேண்டும் என்றார். புதுவைப் பல்கலைக்கழகச் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலத் தலைவர் பேராசிரியர் அரங்க. நலங்கிள்ளி தலைமை தாங்கினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஆ. திருநாகலிங்கம் நோக்கவுரை நிகழ்த்தினார். பேராசிரியர் இளமதி சானகிராமன் நன்றி நவிலத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்

- பேராசிரியர் செ. இரவீந்திரன்
- பேராசிரியர் சு. சண்முகசுந்தரம்
- பேராசிரியர் அ. பாண்டுரங்கன்
- பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன்
- பேராசிரியர் கா. ஈசுவரபிள்ளை
- பேராசிரியர் ஆ. தனஞ்செயன்
- பேராசிரியர் இரா. காமராசு
- பேராசிரியர் நா. இளங்கோ
- பேராசிரியர் ஆ. செல்லப்பெருமாள்
- பேராசிரியர் பா. ஆனந்தகுமார்
- பேராசிரியர் நா. இராமச்சந்திரன்
- பேராசிரியர் மு. பாண்டி
- பேராசிரியர் த. பரசுராமன்
- பேராசிரியர் இரா. அறவேந்தன்
- பேராசிரியர் சு. இராசாராம்
- பேராசிரியர் மா. கோவிந்தராசு
- பேராசிரியர் அ. கலைச்செல்வி
- பேராசிரியர் ஒ. முத்தையா
- முனைவர் கே. பழனிவேலு
- செல்வி கோ. புஷ்பவள்ளி
- பேராசிரியர் மு. முனியசாமி
- பேராசிரியர் சு. தில்லைவனம்
- பேராசிரியர் மு. சுதர்சன்
- முனைவர் சு. தமிழாழிக் கொற்கைவேந்தன்
- பேராசிரியர் தி.கு. இரவிச்சந்திரன்

21.12.2012 அன்று மாலை 4 மணியளவில் கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. இதில் பேராசிரியர் மா.சா. அறிவுடைநம்பி வரவேற்புரையாற்றினார். முனைவர் மூ. கருணாநிதி, முனைவர் பா. இரவிக்குமார் ஆகியோர் நோக்கர் உரை நிகழ்த்தினர். புதுவைப் பல்கலைக்கழக நிகழ்த்துக்கலைப் புலத்தலைவர் கரு.அழ. குணசேகரன் தலைமை தாங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல்துறை முன்னைத் தலைவர் பேராசிரியர் ஆறு . இராமநாதன் கருத்தரங்க நிறைவுரை நிகழ்த்தினார். இறுதியாகப் பேராசிரியர் மதியழகன் நன்றிகூறினார்.

★

கருத்தரங்கம் 10

# தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடும் பிந்திய வளர்ச்சியும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும் இணைந்து 'தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடும் பிந்திய வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் 19.12.2012 முதல் 21.12.2012 வரை மூன்று நாட்கள் கருத்தரங்கினை நடத்தின.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 19.12.2012 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் மொழிப்புல முதன்மையர் பேராசிரியர் சு. அழகேசன் வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ஞா. ஸ்டீபன் நன்றி நவிலத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

- பேராசிரியர் சு. வேங்கடராமன்
- பேராசிரியர் கட்டளைக் கைலாசம்
- பேராசிரியர் ஜெய்கணேஷ்
- பேராசிரியர் சு. அரங்கநாதன்
- பேராசிரியர் த. வேல்மயில்
- பேராசிரியர் அ. அறிவுநம்பி
- பேராசிரியர் இரா. சீனிவாசன்
- பேராசிரியர் சங்கரி சீனிவாசன்
- பேராசிரியர் கஸ்தூரி
- பேராசிரியர் சி. சுப்பிரமணியப்பிள்ளை
- பேராசிரியர் வீ. இரேணுகாதேவி
- பேராசிரியர் கோ. சங்கர வீரபத்திரன்
- பேராசிரியர் சு. அழகேசன்
- பேராசிரியர் கி. ஜெயக்குமார்
- பேராசிரியர் ஏ. ஆதித்தன்
- பேராசிரியர் காவ்யா சண்முக சுந்தரம்
- பேராசிரியர் மாதையன்
- முனைவர் பெ. இராஜேந்திரன்

21.12.2012 அன்று மாலை கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. தமிழியல்துறைப் பேராசிரியர் ஞா. ஸ்டீபன் வரவேற்புரையாற்றினார். பெங்களூர்ப் பேராசிரியர் இரா. சீனிவாசன் வாழ்த்துரை வழங்கினார். குற்றாலம் பராசக்தி கல்லூரித் தமிழாய்வு மாணவி கோமதியும்

தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி மாணவி இந்துமதியும் கருத்துரை வழங்கினர். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் முன்னாள் துறைத்தலைவர் பேராசிரியர் தொ. பரமசிவம் தலைமையுரையாற்றினார். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் கி. நாச்சிமுத்து சிறப்புரையாற்றினார். நிறைவாகப் பேராசிரியர் சு. அழகேசன் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

கருத்தரங்கம் 11

## திருக்குறளில் செவ்வியல் இலக்கிய இலக்கணக் கூறுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசுக் கலைக்கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து 'திருக்குறளில் செவ்வியல் இலக்கிய இலக்கணக் கூறுகள்' என்னும் தலைப்பில் 19.12.2012 முதல் 21.12.2012 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் மு. பழனியப்பன் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இதன் தொடக்கவிழா 19.12.2012 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் மெ. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். சிவகங்கைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் சு. குணசேகரன் வாழ்த்துரை வழங்கினார். காரைக்குடி அழப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. பாண்டி திருக்குறளில் செய்யப்படவேண்டிய ஆய்வுப் பணிகள் குறித்துக் கருத்துரைத்தார்.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் ஆய்வறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

முனைவர் மு. பாண்டி
முனைவர் பழ. முத்தப்பன்
முனைவர் யாழ் சு. சந்திரா
திரு எல்.கே. சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் மு. மீனா
முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன்
முனைவர் அய்க்கண்
முனைவர் வேல். கார்த்திகேயன்
பேராசிரியர் ந. தர்மராஜன்
முனைவர் நா. வள்ளியம்மை
முனைவர் வ. நாராயண நம்பி
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் க. துரையசன்
பேராசிரியர் தெ. முருகசாமி
முனைவர் சு. வேங்கடராமன்
முனைவர் ம.பெ. சீனிவாசன்
முனைவர் சொ. சேதுபதி
பேராசிரியர் அ. அறிவுநம்பி
தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
திரு எஸ். குணசேகரன்

21.12.2012 அன்று மாலை கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் மெ. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். முனைவர் அ. அறிவுநம்பி சிறப்புரையாற்றினார். விழா நிறைவுப் பேருரையைக் குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார் வழங்கினார். அவ்வுரையில் அவர், வாழ்வின் திறவுகோலாகத் திருக்குறள் இருந்துவருகிறது. அனைத்துவிதமான ஐயங்களுக்கும் இந்நூலில் தீர்வு உள்ளது. மானுடச் சிக்கலுக்குக் கல்வி ஒன்றுதான் தீர்வு என்பதைத் திருக்குறள் வலியுறுத்திச் சொல்கிறது என்றார். மாணவர்கள் சார்பாகப் பாலமுருகன், சண்முகவல்லி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

★

கருத்தரங்கம் 12

## செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் மேலாண்மை நடைமுறைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சிவகாசி ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரித் தமிழியல் துறை 'செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் மேலாண்மை நடைமுறைகள்' என்னும் தலைப்பில் 27.12.2012 முதல் 29.12.2012 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தியது. இக்கருத்தரங்கின் தொடக்க விழா 27.12.2012 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரியின் முதல்வரும் தமிழியல் துறைத் தலைவருமான முனைவர் ச. கண்மணி வரவேற்புரை நல்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தலைமையுரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் கீழ்க்காணும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
பேராசிரியர் பொ.நா. கமலா
முனைவர் அ.ஹெப்சி ரோஸ்மேரி
பேராசிரியர் சோ. முத்தமிழ்ச்செல்வன்
திருமதி அ. ரூபாதேவி
பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
முனைவர் ச. பாரிஜாதம்
முனைவர் மு. சுதா
செல்வி பெ. சிவசக்தி
திருமதி சு. கோமதி அழகு
முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
முனைவர் யாழ் சு. சந்திரா
முனைவர் ஜா. எவாஞ்சலின் மனோகரன்
திருமதி சு. ஜெயலட்சுமி

இந்தக் கருத்தரங்கின் நிறைவு விழா 29.12.2012 அன்று மாலை 4 மணி அளவில் நடைபெற்றது. ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரித் தமிழியல் துறை இயக்குநர் முனைவர் நா. பொன்மதி வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு தலைமையுரையாற்றினார். ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரியின் உதவிப் பேராசிரியரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் கு.கரு. முருகானந்தராஜன் நன்றியுரையாற்ற மூன்றுநாள் கருத்தரங்கம் சிறப்புற நிறைவுபெற்றது.

★

# பழந்தமிழ்ச் சொல்லமைப்பு

பேராசிரியர் சி. இலக்குவனார்

மொழி சொற்களால் ஆயது. மொழிக்குச் சொல் என்னும் பொருளும் உண்டு.

> **ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி**
> **இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி யுளப்பட**
> **மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே**
>
> (தொல். மொழி- 12)

என மொழி தோன்றியுள்ள நெறியே சொற்களால்தான் என்று ஆசிரியர் தொல்காப்பியர் ஆராய்ச்சி பொருந்தக் கூறியுள்ளார். மொழியில் உள்ள சொற்களின் அமைப்பைக் கொண்டே மொழிகளை வகைப்படுத்தியுள்ள முறைமையும் உண்டு. சொல்லமைப்பால் மொழிகளை வகைப்படுத்தியோர் தனிநிலை மொழி, ஒட்டுநிலை மொழி, சொற்றொகை நிலைமொழி என்று மொழிகட்குப் பெயரிட்டுள்ளனர்.

தனிநிலை மொழியில் எல்லாம் தனித்தே நிற்கும். அச்சொற்கள் எல்லாம் வேர் அல்லது அடிச் சொற்களாகவே இருக்கு. சொற்கள் தொடரில் நிற்கும் முறையாலும் கூறுவோர் ஒலிக்கும் முறையாலும் பொருள் வேறுபடும். சொற்கள் எல்லாம் இருவகைப்படும். அவை பொருளுறு சொல், பொருளில் சொல் எனப்படும். இத் தனிநிலைமொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுச் சீன மொழியாகும். இன்னும் சயாம் மொழி, பர்மிய மொழி, திபேத்து மொழி முதலியனவும் இவ்வகையைச் சார்ந்தனவே.

ஒட்டுநிலை மொழியில் சொல் உருவாகி இருக்கும் முறையை எளிதில் அறியலாம். ஒரு சொல்லைப் பல உறுப்புகளாகப் பிரிக்கலாம். **கொடுப்பான்** என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் கொடு + ப் + ப் + ஆன் என்று பிரித்தல் இயலும். ஒவ்வோர் உறுப்புக்கும் ஒரு பெயர் உண்டு. **கொடு** பகுதி; **ப்** இடைநிலை; **ப்** சாரியை; **ஆன்** விகுதி. இவ்வாறு அவை ஒட்டி நிற்கும் நிலை தெளிவாகத் தெரிவதால் ஒட்டுநிலை என்றனர். உலகில் உள்ள பல மொழிகளும் இந்நிலையைச் சார்ந்தனவே. தமிழும் அதனைச் சார்ந்த மொழிகளும் சித்திய இனமொழிகளும் ஒட்டுநிலை மொழிகளே என்பர். தென் ஆப்பிரிக்காவின் பண்டு மொழி, ஆசித்திரேலியாவின் பழங்குடி மக்கள் மொழி, மலேயா மொழி, சப்பானிய மொழி, கொரிய மொழி, பின்னிசு மொழி, பாசுகு மொழி முதலியன இவ் வொட்டு நிலையைச் சார்ந்தன என்பர்.

உட்பிணைப்பு நிலை என்பது சொல்லின் உறுப்புகள் இணையுங்கால் இணைந்த நிலை அறிய முடியாமல் சொல்லின் வடிவம் மாற்றமுற்று அமைவது. சொல்லின் பகுதி, இடைநிலை, விகுதி முதலியன எளிதில் பிரித்தறிய முடியாதவாறு பிணைந்து கிடக்கும். மேலை நாட்டு மொழிகள் பலவும் ஆரிய மொழியும் இவ்வகையின என்பர். பகுதி யொன்றே பலவகையாய்த் திரிந்து பொருள் தரும்.

செமிடிக் மொழியினங்களும் உட்பிணைப்பு வகையைச் சார்ந்தன என்பர். பகுதி முதலியன பிரித்துக் காண முடியாதவாறு சொல் வடிவம் மாற்றமுறும். மெய்யெழுத்துக்கள் அப்படியேயிருந்து உயிர்மாற்ற முறுவதால் பொருள் வேறுபடும்.

சொற்றொகை நிலை என்பது தொடரில் நிற்கும் சொற்கள் பிரித்தறிய இயலாதவாறு பிணைந்துநின்று பொருள் விளக்கம்



தருவது. அமெரிக்காவின் பழங்குடி மக்கள் பேசும் மொழி இவ்வகையைச் சார்ந்தது என்பர்.

இவ்வகைகளுள் நம் தமிழை ஒட்டுநிலையில் சேர்த்திருந்தாலும் மூவகை நிலையும் தமிழில் காணலாம்.

**மடப்பள்ளியில் சோறு சமை, பள்ளிவாசலில் ஆண்டவனைத் தொழு, பள்ளியறையில் படுக்கை போடு, பள்ளிக்கூடம் சென்று படி** என்னும் தொடர்களில் பள்ளி என்னும் சொல் முன்பின் சேர்ந்த சொற்களால் பொருள் மாற்றம் பெற்றுள்ளது. வேற்றுமை உருபுகளைப் பொருளில் சொற்கள் என்றும் ஏனையவற்றைப் பொருளுறு சொற்கள் என்றும் கூறலாம். **தபு** என்பதைப் படுத்துச் சொன்னால் ஒரு பொருளும் எடுத்துச் சொன்னால் பிறிதொரு பொருளும் தோன்றுவதைத் தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளார். ஆதலின் தமிழில் தனி நிலையும் உண்டு எனலாம்.

**செத்தான், கண்டான்** என்ற சொற்களின் பகுதிகள் தெளிவாக இல்லை. **சா, காண்** என்பன அவற்றின் பகுதிகள் என்பர். **கொண்டுவா** என்பது **கொணா** எனத் திரிந்து நிற்கின்றது. ஆதலின் தமிழில் உட்பிணைப்பு நிலையும் உண்டு எனலாம்.

> **கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு**
> **மொண்டொடி கண்ணே யுள** (குறள் - 1101)

என்பதும் ஒருவகைச் சொற்றொகை நிலை எனலாம். ஆதலின் சொல்லமைப்பாலும் சொற்றொடரில் சொல் நிற்கும் நிலையாலும் மொழிகளை வகைப்படுத்துதல் பொருந்தாது என்பது சிலர் கொள்கை. ஒரு மொழியில் தனிநிலை வாக்கியங்கள் மிக்கிருக்கும் போதே ஒட்டுநிலையான சொற்கள் பல அமைகின்றன. ஒட்டுநிலை மொழியில் உட்பிணைப்பு நிலை மெல்ல இடம் பெறுகின்றது. உட்பிணைப்பு நிலையில் தனிநிலைக்கான வளர்ச்சி ஓரளவும் இடம்பெறுகின்றது. இவ்வாறு ஒரே மொழியில் மூவகை நிலையும் மாறி மாறி வளர்கின்றன எனலாம்[1] (These different stages however are the result of modifications taking

place at the same time in every language, which influence the morphological system at very point, and whose momentary succes or otherwise is determined by particular conditons in each language. Further transformation is never complete; the earlier forms often live side by side with the new onces. J. Vendryes, Language, Page 349)

ஒரு மொழியில் ஒரு நிலை நிறைந்திருக்கலாம். ஏனைய நிலைகள் குறைந்திருக்கலாம். காலப்போக்கில் குறைந்த நிலை நிறைந்து, நிறைந்த நிலை குறையலாம். ஆதலின் சொல்லமைப்பு கொண்டு நிலைகளை வகைப்படுத்தி மொழிகளிடையே ஏற்றத் தாழ்வு கற்பித்தல் பொருந்தாது. குடும்ப வாழ்க்கை அளவில் நாகரிகம் நின்றுவிட்ட மக்கள் பேசும் மொழியே தனிநிலை மொழி என்றும் ஊர் ஊராக அலைந்து திரியும் நாடோடிக் கூட்டத்தினர் பேசும் மொழியே ஒட்டுநிலை மொழி என்றும் நாடு அமைத்து ஆளும் நாகரிகம் பெற்று உயர்ந்துள மக்கள் பேசும் மொழியே உட்பிணைப்பு நிலைமொழி என்றும் கூறுதல் எட்டுணையும் பொருந்தாது.

இந்தோ - ஐரோப்பிய மொழிகளுக்கு ஏற்றம் தரும் நோக்கோடு உட்பிணைப்பு மொழியே உயர் நாகரிகத்தைக் காட்டும் என்று கூறியதை அறிஞர் உலகம் ஏற்காது.

தமிழ்மொழி ஒட்டுநிலைக்குரியதாகக் காணப்படுவதால் தமிழர் நாகரிகத்தால் தாழ்ந்தவர் என்று கூறிவிடுதல் பொருந்தாது. தமிழில் ஒட்டுநிலையும் உள்ளது; உட்பிணைப்பு நிலையும் உள்ளது; தெளிவான முறையில் பொருளை விளக்கவும் சொற்களை உருவாக்கவும் துணைபுரிவது ஒட்டுநிலையேயாகும். தெளிவுக்கும் எளிமைக்கும் இனிமைக்கும் இருப்பிடமாய் உள்ள பழந்தமிழின் சொல்லமைப்புகளை இனி ஆராய்வோம்.

நகை, பகை, விருந்து, விருப்பு, வரவு, முடவு, நிலவு, பனுவல், உரை, சுனை, மறத்தல், பிரிதல், சாதல், உறை, நிறை, பிணையல், பூசல் என்பனவெல்லாம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்பட்ட பெயர்ச் சொற்களாகும். எல்லாம் ஓரசை அல்லது ஈரசைச் சொற்களாகவே யுள்ளன.

பூண்க, காண்கும், மொழியலன், வாரார், ஆரார், உள்ளாள், அஞ்சாது, உயிர்க்கும், இரங்கேன், இலர் என்பனவெல்லாம் வினைச்சொற்கள்.

மாண், கொய், அயர், வாழ், முதிர், ஆடும், மலரும், மூது, கெடு, திருந்து, முழங்கு என்பன அடைமொழிகளாக வந்துள்ள சொற்கள்.

**திராவிட மொழிச் சொற்கள், ஆசிய அல்லது ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த மொழிச் சொற்கள் எல்லாவற்றைக் காட்டிலும் நீளமுடையன என்னும் கூற்றுப் பழந்தமிழ் மொழிக்குப் பொருந்தாது.** வேர்ச்சொல்லோடு ஐ, வு, அல், தல், அம் போன்ற விகுதிகள் சேர்ந்து பெயர்ச்சொல் வடிவம் பெற்றுள்ளன. **நகு** என்பதனுடன் **ஐ** சேர **நகை** என ஆகியுள்ளது. இதனடியில் வினைச்சொற்கள் தோன்றுங்கால் நகைப்பான், நகைத்தான், நகைக்கின்றான் என்று பிற்காலத்தில் உருவெடுத்தன. பழந்தமிழில் **நகு** என்பதே **நக்கான்** என இறந்த கால வினையாகவும் **நகும்** என நிகழ்கால எதிர்கால வினையாகவும் உருவெடுத்துள்ளது.

பழந்தமிழ் பற்றி அறிவதற்கு நமக்குத் துணையாய் உள்ளன பாடல்களே. பாடல்களில் சுருங்கச் சொல்லும் முறையையே பின்பற்றியிருப்பர். ஆதலின் பாடலில் பயின்றுள்ள சொற்களைக் கொண்டு மட்டும் பழந்தமிழ் நிலை முழுவதும் அறிய இயலாது என்று கூறலாம். பழந்தமிழ்ச் சொற்களையே இன்றும் பயன்படுத்தி வருகின்றோம். இன்றுள்ள பேச்சு வழக்கிலும் பெரும்பாலான சொற்கள் ஈரசைகள் கொண்டுள்ளனவாகவேயுள்ளன. தமிழ்ச்சொற்கள் சுருங்கியும் விரிந்தும் பொருள் உணர்த்தும் ஆற்றலைப் பெற்றுள்ளன. **ஆடு அரங்கு** என்பது பழந்தமிழ் வழக்கு; இன்றும் அப்படியே கூறலாம். கூறுவோரும் கேட்போரும் புலமை மிக்கோராய் இருத்தல் வேண்டும். **ஆடுகின்ற அரங்கு** என்பன விரித்துக் கூறும் நிலையில் உள்ளவை. **சுடுசோறு** என்பது இன்றும் வழக்கில் உள்ளதே. வினை, பகுதியளவில் நின்று பெயருக்கு அடையாய்ப் பொருந்தி அதன் இயல்பை உணர்த்தும். இவ்வாறு வருவதை வினைத்தொகை என்பர் இலக்கண நூலார்.

வேர்ச்சொற்களை ஆராயின் பெரும்பாலன வினையடிகளாகவே உள்ளமை தெளியலாம். அவ்வினையடிகள் முன்னிலை ஏவலாகவும் பெயர் அடையாகவும் வினைச் சொல்லின் அடியாகவும் முதனிலைத் தொழிற்பெயராகவும் விகுதிகள் இணைந்த பின்னர்ப் பெயர்ச்சொல்லாகவும் உருப்பெறும்.

**காய்** என்ற வேர்ச்சொல் **நீ வெறு, சூடாகு, சூடாக்கு** என்ற பொருளைத் தரும் முன்னிலை ஏவலாக வரும். அச்சொல்லே பெயர்ச்சொல்லாக நின்று ஒன்றின் காய் (மாங்காய்) என்ற பொருளிலும் வரும். **காய்கொம்பு** என்றால் காய்ந்த, காய்கின்ற, காயும் கொம்பு என்று பொருள் தரும். **காய்க்கொம்பு** என்றால் **காய்த்திருக்கும் கொம்பு** என்று பொருள் தரும். காய்ந்தது, காய்த்தது என்ற சொற்களில் பகுதியாகவும் வந்துள்ளது. இனிக் காய்தல், காய்ச்சல், காயல் என விகுதிகள் பெற்ற பெயர்களாகவும் வரும். இவ்வாறு ஒரு மூலம் பலவகைச் சொற்களும் தோன்றுவதற்கு இடம் தந்து நிற்பது தமிழுக்குரிய சிறப்புகளில் ஒன்றாகும். இவ்வாறு சொற்கள் தோன்றுவதற்கு உரியனவாக இருத்தலினால்தான் ஆசிரியர் தொல்காப்பியர் வேர்ச்சொற்களை உரிச்சொல் என்று அழைத்தனர் போலும். அதன் இயல்பைப் பற்றிக் கூறுங்கால் **பெயரினும் வினையினும் மெய் தடுமாறி வரும்** என்று கூறியிருப்பது உண்மை நிலையை அறிவிக்கும் பொருட்செறிவு மிக்கக் கூற்றாகும் அன்றோ.

சில வேர்ச்சொற்கள் உயிர்க்குறிலை இறுதியில் பெற்றிருப்பின் அவ்வுயிர் நீண்டு அளபெடுத்துப் பெயராகிவிடும் இயல்பின. ஆடு, மகடு என்பன ஆடூஉ, மகடூஉ எனவாகி ஆண், பெண் எனும் பொருள் தந்து நிற்கின்றன.

சில வேர்ச்சொற்கள் அளபெடுத்து வினையெச்சங்களாகி நிற்கின்றன; மறைஇ, கொளீஇ, தழீஇ. இவை முறையே மறைத்து, கொளுவி, தழுவி என்னும் பொருள் தரும். பிற்காலத்தில் விளக்கந்தரும் வகையில் மறைத்து, கொளுவி, தழுவி எனும் சொற்களைப் பயன்படுத்தி அவற்றை மறக்கத் தொடங்கிவிட்டனர்.

வேர்களாக நின்று பலவகையிலும் பயன்பட்ட மூலங்கள் சொல்லாக்க விகுதிகளைப் பெற்று அவ்விகுதிகளோடு இணைந்து சொல்வடிவம் பெற்ற பின்னர் அச்சொற்களாகவே என்றும் நிலைத்துவிட்டன. **நினை** என்னும் வேர் முன்னிலை ஏவலாகவோ **நினைஇ** என எச்சமாகவோ **நினை நாள்** என வினைத்தொகையாகவோ **நினைத்த, நினைக்கும், நினைப்ப** எனச் சொற்களில் பகுதியாகவோ வரும். ஆனால் நினைதல் எனத் **தல்** விகுதி பெற்ற பின்னர்த் தொழிற்பெயராகவே நின்று

விடுகின்றது. **நினைதல்** நினைதலாகவே நிற்பினும் **நினை** இன்னும் முன்னிலை ஏவலாகவும் வினைத்தொகையாக நின்று பெயர் அடையாகவும் பயன்படுகிறது. பல வேர்ச்சொற்கள் அவ்வாறு பயன்படுவதில்லை. வரவு, முடவு, சுறா, முதலை, கணம், விருந்து, புரவி, குவளை, சோலை, வரை, விழவு போன்றனவெல்லாம் வேர்ச்சொற்களோடு விகுதிகள் பெற்ற பெயர்ச்சொற்களே. பெயர்ச்சொல் தன்மை அடைந்த பின்னர் அவற்றின் பழைய நிலையும் அறிந்தோமிலை. உயர்வு பெற்ற சிலர் தம் பழைய நிலையை மறந்துவிடுதல் போன்று இவையும் மறந்துவிட்டன.

வினைச்சொல் தன்மையை அடையுங்கால் காலம் காட்டும் உருபைப் பெறவேண்டியுள்ளன. பகுதியுடன் கால எழுத்தும் சேருங்கால் அவை இரண்டையும் பொருந்தச் செய்ய வேறொரு எழுத்தும் வேண்டப்படுகின்றது. **நினை** இறந்த காலத்தை அறிவிக்குங்கால் நினைந்து என்று உருப்பெறுகின்றது. த் இறந்த காலம் காட்டுவது. அதனைப் பகுதியுடன் இணைக்க **ந்** வேண்டியுள்ளது. ஆனால் எதிர்கால எழுத்தை இணைக்குங்கால் அதுவே இரட்டித்து விடுகின்றது. **நினை+ப்+ப = நினைப்ப**. முற்றுச் சொல்லாகுங்கால் அச்சொல் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை அறிவிக்கும் கடப்பாட்டைப் பெற்றுவிடுகின்றது.

மேல்நாட்டு மொழிகளில் பலவற்றுள் திணை, பால், எண், இடங்களை வினைச்சொல் அறிவிப்பதில்லை. அறிவிக்கும் இயல்பைப் பெற்றிருந்தனவும் நாளடைவில் அவ்வியல்பை இழந்துவிட்டன. தமிழ்க் குழு மொழிகளுள் ஒன்றாகிய மலையாளமும் வினையால் திணை, பால், எண் அறிவிப்பதை விட்டுவிட்டது. இம்முறையே மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவது என்று கருதுகின்ற மொழி நூலறிஞர்களும் உளர்.

பெயரால் மட்டும் திணை பால் முதலியவற்றை அறியலாகும் நிலை ஏற்படுங்கால் தெளிவு பிறவாது. மாணிக்கம் எனும் சொல் ஆண், பெண், அஃறிணை ஒருமை ஆகிய பால்களில் பயன்படும் ஒரு சொல்லாகும்.

மாணிக்கம் வந்தது என்றால் ஆணா, பெண்ணா, அப்பெயருள்ள நாயா என்று அறிய இயலாது.

தமிழ் முறைப்படி மாணிக்கம் வந்தான் என்றால் ஆணையும் வந்தாள் என்றால் பெண்ணையும் வந்தது என்றால் நாய் என்ற ஒன்றன்பாலையும் தெளிவாக அறியலாம். எனவே வேர்ச்சொற்கள் வினைச் சொல்லாகுங்கால் கால எழுத்து விகுதி இரண்டையும் பெறுவதோடு அவற்றை இணைக்கும் சாரியைகளையும் பெறுகின்றன. வடிவம் நீண்டுவிடுகின்றது.

நினைப்பான், நினைத்தான் எனுங்கால் ஐந்து எழுத்துகளைப் பெறவேண்டிவிடுகின்றது.

எதிர்மறையை அறிவிக்கக் கருதின் வினைச்சொல் வாயிலாகத்தான் அறிவித்தல் வேண்டும். தமிழில் பலவகையில் எதிர்மறை அறிவிக்கப்படும். பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தால்:

மொழியலன்,
அஞ்சாது,
இரங்கேன்,
குன்றல் இலர்,
வேட்டனை அல்லை

என்பன போன்ற எதிர்மறை வினைகள் தோன்றுகின்றன. **மொழியலன்** என்னும் சொல்லில் பகுதியை அடுத்து **அல்** வந்து எதிர்மறையை அறிவிக்கின்றது. **இரங்கேன்** என்னும் சொல்லில் **இரங்கு** என்னும் பகுதியை அடுத்து **ஏன்** விகுதி சேர்ந்ததனாலேயே எதிர்மறை வெளிப்படுகின்றது. அஞ்சாது என்னும் சொல்லில் **அஞ்சு** என்ற பகுதியை அடுத்து **ஆ** என்ற எழுத்துப் பொருந்தி எதிர்மறையைத் தருகின்றது. **குன்றல் இலர், வேட்டனை அல்லை** எனும் இரண்டிலும் சொல்லுக்குப் புறம்பே **இலர், அல்லை** என்ற இரண்டு எதிர்மறைச் சொற்கள் தனித்து நின்று பொருந்துதலால் எதிர்மறைப் பொருளை விளக்குகின்றன. பின்னிரண்டும் சொற்களுக்கு வெளியே நிற்பன ஆதலின் சொல் வடிவத்தை நீளச்செய்யா.

சொல்லினுள் சேர்க்கப்படும் **அல், ஆ** இரண்டினால் சொல் வடிவம் நீட்டப்படுகின்றதா எனில் இல்லை என்றே கூறல் வேண்டும். எதிர்மறை வினைகளில் கால இடைநிலை நிற்பதில்லை. ஆகவே ஒன்றை இழந்து ஒன்றைப் பெறுகின்ற தன்மையைக் காணுகின்றோம். உடன்பாட்டு வினையும் எதிர்மறை வினையும் எழுத்துப் பெருக்கத்தில் ஒரு தன்மையனவே. தமிழ்ச் சொற்களின் பேரெல்லை எழுத்துகள் ஐந்து அல்லது ஆறு என்று கூறிவிடலாம்.

**திராவிடச் சொற்கள் எவ்வளவு நீளமுடையனவாகக் காணப்படினும் அச்சொற்களில் ஒன்றன்பின் ஒன்றாக இணைந்து நிற்கும் சொல்லுருபுகளை நீக்கிவிட்டால் கடைசியில் அச்சொற்கள் ஓரசையால் ஆன வேர்ச்சொல்லிலிருந்தே தோன்றின என்பது புலப்படும். இவ்வாறு அடுத்து அடுத்து வந்த ஒட்டுநிலைகளால் ஆறு அசை(எழுத்து)களால் ஆன ஒரு சொல் ஓர் அசையிலிருந்தே பிறந்துள்ளது என்பது காணப்பட்டது. இத்தகைய இணைப்புகளால் அச்சொல் பெறும் ஒவ்வொரு வடிவிலும் அச்சொல்லின் மூலப்பகுதி மட்டும் சிறிதும் மாற்றம் பெறுவதில்லை. செமிடிக், இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொற்கள் பின்னர்ப் பிரிந்துணர முடியாதபடி பெருமளவில் மாற்றப்பட்டிருக்க, திராவிட மொழிச் சொற்களின் மூலப்பகுதி பெற்றிருக்கும் இத்தெளிவும் தனிப்பண்பும் துருக்கி அங்கேரி போலும் சித்திய இன மொழிகளிலும் குறிப்பிடத்தக்க சிறப்புகளாக அமைந்துள்ளன.**[2] இவ்வாறு அறிஞர் கால்டுவெல் அவர்கள் தமிழ்ச்சொல்லின் ஆக்கம் பற்றிச் சிறப்பித்துக் கூறியுள்ளார். ஓர் எழுத்தோ ஓர் அசையோ வேராக நின்று படிப்படியாக வேண்டுமளவுக்குச் சொல் வளர்ந்து உருவாகும் எளிமை இயல்பு தமிழின் சிறப்பு இயல்புகளில் ஒன்றாகும். தமிழில் சொல்வளம் பெருகுவதற்கும் கருத்துக்களைப் பிறர் உணருமாறு நன்கு அறிவிப்பதற்கும் இவ்வியல்பு பெருந்துணை செய்வதாகும். அடிமரம் ஒன்றாக இருந்து கிளைகள் பலவாகப் பெருகுதல் போன்று அடிச்சொல் ஒன்றேயாக அதனின்று பல சொற்கள் தோன்றிப் பெருகிவிடுகின்றன.

**தகு** எனும் ஓர் அடியிலிருந்து **தகுதி, தகை, தகைமை, தக்க, தக்கார், தக்கவன், தக்கன்** போன்ற சொற்கள் உருவாகின்றன.

வேர் அல்லது அடிப்பகுதியோடு ஓர் எழுத்தோ ஓர் அசையோ சேர்ந்து சொல்வடிவம் உருவாகின்றது. இவ்வாறு சேர்வனவற்றைச் சொல்லாக்க உருபுகள் என்பர். **திரு** என்பது அடிச்சொல் என்றால் அதனுடன் து சேர்ந்து **திருந்து, திருத்து**

என்ற சொற்கள் தோன்றுகின்றன. சேருங்கால் மெல்லெழுத்து உடன் சேரின் தன்வினையாகவும் வல்லெழுத்து உடன் சேரின் பிறவினையாகவும் ஆகிவிடுகின்றன. இம்முறையும் தமிழுக்குள்ள சிறப்புக்களில் ஒன்றாகும். பிறமொழிகளில் பிறவினைப் பொருளைத் தருவதற்கு இரண்டு மூன்று சொற்களால் கூற வேண்டியிருக்கத் தமிழில் மெல்லினம் வல்லினமாக மாறுவதால் தன்வினை பிறவினையாகி விடுகின்றது. அடங்கு - அடக்கு; நீங்கு - நீக்கு; நிரம்பு - நிரப்பு; மயங்கு - மயக்கு.

வேர்ச்சொல்லின் இறுதி மெய் இரட்டிப்பதனாலும் சொல்லின் வடிவமும் பொருளும் வேறுபடும். கு, சு, டு, து, பு, று என்பனவற்றை இறுதியில் உடைய அடிச்சொற்கள்தாம் இரட்டிக்கும். அடிச்சொற்கள் தம் இறுதி மெய்யை இரட்டிப்பதனால் பெயர் அடையாக மாறும்; பகுதி இறந்த காலம் காட்டும்; தன்வினை பிறவினையாக மாறும்; பெயர்கள் உருவாகும்.

சேறு : சேற்று நிலை (அகம். 46)[3]

இங்குப் பெயர் அடையாக மாறியுள்ளது.

அடு: அட்ட (குறுந்தொகை, 167)[4]

இங்கு இறந்த காலம் காட்டுகின்றது.

சூடு : சூட்டி (புறம். 332)[5]

தன்வினை, பிறவினையாக மாறியுள்ளது.

எழுது: எழுத்து (ஐங்குறுநூறு 352)[6]

வினை, பெயராக மாறியுள்ளது.

சில வேர்ச்சொற்களில் மூல உயிர் மாறுவதனால் சொல்வடிவம் வேறுபட்டுப் பொருள் வேறுபாட்டை அறிவிக்கும். குறில் நெடிலாகவோ நெடில் குறிலாகவோ மாறுதலை அடையும்.

**மின்** என்பது **மீன்** என்று ஆகியுள்ளது.

**காண்** என்பது **கண்** என்று ஆகியுள்ளது.

**கெடு** என்பது **கேடு** என்றும், **உண்** என்பது **ஊண்** என்றும் வந்துள்ளமை காண்க.

தன்மை முன்னிலை இடப்பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்குங்கால் மூல உயிர் வேறுபடும்.

யான், என் என்றும் யாம், எம் என்றும் நீ, நின் என்றும் நீயிர், உம் என்றும் குறுகி வேற்றுமை உருபுகளை ஏற்கும். இவ்வாறு உயிர் குறுகுவதனால் சொல்லுவதில் ஆற்றலும் அழுத்தமும் பொருந்துகின்றன.

**யானுகு** என்பதைவிட **எனக்கு** என்பதும்

**யாமுகு** என்பதைவிட **எமக்கு** என்பதும்

**நீக்கு** என்பதைவிட **நினக்கு** என்பதும்

**நியிருக்கு** என்பதைவிட **நுமக்கு** என்பதும்

ஆற்றலும் அழுத்தமும் பெற்று விளங்குகின்றன அன்றோ!

வேர்ச்சொல்லிலிருந்து பண்பையும் தொழிலையும் உணர்த்தும் சொற்கள் தோன்றி அடைகளாக வருங்காலத்தில் மீண்டும் வேர்ச்சொல் தன்மையை அடைந்து அடைகளாக நிற்கின்றன. இம்முறையால் எளிமையும் சுருக்கமும் இனிமையும் பெருகும்.

**வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடீஇயர்**
**செல்கஎன் றோளே அன்னை யெனநீ**
**சொல்லின் எவனோ தோழி! கொல்லை**
**நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த**
**குறுங்கை இரும்புலிக் கொலைவல் ஏற்றை**
**பைங்கண் செந்நாய் படுபதம் பார்க்கும்**
**ஆர்இருள் நடுநாள் வருதி**
**சாரல் நாட வாரலோ எனவே**[7]

இப்பாடலுள் வந்துள்ள வளை, சிறு, வினை, நெடு, வன், கடு, குறு, இரு, வல், பைம், செம், படு, ஆர், நடு என்பன வேர்ச்சொல்லளவே நின்று பொருட்சிறப்பைத் தந்துள்ளன.

இவ்வாறு வருவன பண்புத்தொகை என்றும் வினைத்தொகை என்றும் அழைக்கப்பெறும். பண்பை விளக்கும் சொல்லுருபு மறைந்து நிற்பது பண்புத்தொகை என்றும் காலம் காட்டும் இடைநிலை முதலியன மறைந்து நிற்பது வினைத்தொகை என்றும் சொல்லப்பெறும்.

இப்பாடலுள் பயின்றுள்ள **வளை, வினை, படு** முதலியன வினைத்தொகைகளாம். ஏனைய **சிறு, நெடு, வன், கடு, குறு, இரு, பைம், செம், ஆர், நடு** முதலியன பண்பை அறிவிப்பனவாம்.

இவ்வாறு சொற் சுருங்க உரைப்பதனால் இனிமையும் அழகும் பெருகுவதனால் வேற்றுமை உருபு, உவம உருபு, உம்மை இடைச்சொல் முதலியன மறைந்து நிற்கச் சொற்றொகைகளை உருவாக்கும் சிறப்பும் பழந்தமிழ்க்குண்டு.

பொன்னாற் செய்யப்பட்ட குடத்தைப் பொற்குடம் என்றாலும் பொன் போன்ற மேனியைப் பொன்மேனி என்றாலும் தூணியும் பதக்கும் என்பதைத் தூணிப் பதக்கு என்றாலும் யார்தாம் அறியார்.

வெள்ளாடையை உடுத்த பெண்ணை வெள்ளாட்டி என்றும் பொன்னால் செய்யப்பட்ட தொடியை அணிந்தவளைப் பொற்றொடி என்றும் அழைத்தல் தமிழில் தொன்றுதொட்டு வரும் மரபாகும். இவ்வாறு சுருக்கிச் சொல்லப்படும் தொடர் அன்மொழித்தொகை எனப் பெயர் பெறும்.

இக்காலத்தில் வினா, வியப்பு முதலியவற்றைக் குறிப்பதற்கு ?, ! ஆய குறியீடுகளைப் பெற்றுள்ளோம். இம்முறை ஆங்கில மொழியின் உறவால் நமக்குக் கிடைத்துள்ளதாகும். கருத்துக்களை வெளிப்படுத்துங்கால் இவை இரண்டுதானா உள? கழிவு, ஆக்கம், ஒழியிசை, விழைவு, காலம், அச்சம், பயனின்மை, பெருமை, எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, பிரிநிலை, வினா, தேற்றம் முதலியனவற்றையும் உணர்த்துவதற்கு அடிச் சொற்களையே சொற்றொடரில் நிறுத்தி வந்துள்ள முறைமை பழந்தமிழில் காணலாம். இவ்வாறு பயன்படுத்தப்படுவனவற்றை இடைச்சொல் வரிசையில் சேர்த்துச் சிறப்புடையனவற்றைத் தொல்காப்பியர் தொகுத்துக் கொடுத்துள்ளமையை முந்திய இயலில் சுட்டிக்காட்டியுள்ளோம். பொருள்களின் இயல்புகள் நிலைமைகட்கு ஏற்பப் பெயரிடும் முறையும் பழந்தமிழில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆண், பெண் எனும் இரு சொற்களை எடுத்துக்கொள்வோம். ஆண்மைக்குரியவனை **ஆண்** என்றும் விரும்பும் அழகுக்குரியவளைப் **பெண்** என்றும் பெயரிட்டுள்ளமை எவ்வளவு பொருத்தமானது. இல்லற வாழ்வில் கணவனே தலைவன் என்றாலும் மனைவியும் தலைவிதான் என்று கருதித் தலைவனுக்குரியவள் **தலைவி**

என்று பெயரிடப்பட்டுள்ளார். தலைவனுக்குரியவள் அடிமை என்று கருதப்படவில்லை. இல்லறம் நடத்தும் வீட்டுக்கு உரியவர்கள் இருவரும் என்றாலும் மனைவிக்குத்தான் மிகுந்த பொறுப்பு என்பதனை உணர்த்த அவளை **மனைவி** (மனை + வி= மனைக் குரியவள்) என்றனர். கணவனை மனைவன் என்று அழைத்திலர். **கிழவன், கிழத்தி** என்ற சொற்களை நோக்குவோம். **கிழவன்** என்றால் **உரியவன்** என்று பொருள். யாருக்கு உரியவன்? அவளுக்கே உரியவன். பிற பெண்களுக்கல்லன். **கிழத்தி** என்றால் உரியவள். யாருக்கு? அவனுக்கே உரியவள். பிற ஆடவர்க்கு உரியவள் அல்லள்.

ஆடவர்களின் பல பருவநிலைகளைக் குறிக்கவும் பெண்களின் பல பருவநிலைகளைக் குறிக்கவும் தனித்தனிச் சொற்கள் உள.

தமிழில் வழங்கும் அம்மை, அப்பன் என்ற சொற்கள் உலகில் உள்ள மொழிகளில் இடம்பெற்றுள்ளன. இரண்டும் அகரத்தை முதலாக உடையன. தாயின் மென்மை அழகுக்கேற்ப மெல்லெழுத்துச் சேர்ந்தும் தந்தையின் வன்மைப் பற்றுகட்கு ஏற்ப வல்லெழுத்துச் சேர்ந்தும் உருவாகியுள்ளமை தனிச்சிறப்பாகும்.

இவ்வாறு தமிழில் சொற்கள் உருவாகிக் கருத்து அறிவிக்கும் கருவிகளாகப் பயன்பட்டு வருகின்ற இயல்பினைப் பழந்தமி மொழியின் தொடக்கக் காலத்திலிருந்தே பெற்று வந்துள்ளோம். பழந்தமிழ்ச் சொல்லமைப்பு முறையைப் பாரில் எம்மொழியும் பெற்றிடக் கண்டிலோம்.

**சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே** - பாரதியார்.

1. முனைவர் மு. வரதராசனார்: மொழி வரலாறு
2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்: பக்கம் 222
3. சேற்று நிலை முளைஇய செங்கட்காரான்
4. தாள் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
5. மங்கல மகளிரொடு மாலை சூட்டி
6. எழுத்துடை நடுகல் (இவை ஆரியர் வருகைக்கு முன் தோன்றிய பழந்தமிழ் இலக்கியப் பாடல்களிலிருந்து எடுக்கப்பட்டன.)
7. இப்பாடல் மதுரைப் பெருங்கொல்லன் என்பவரால் பாடப்பட்டதாகும். குறுந்தொகை 141.

நன்றி:

(இலக்குவனார் திருவள்ளுவன் (ப.ஆ.). 2009. **பழந்தமிழ்**. சென்னை: திருவாட்டி தி. அன்புச்செல்வி. பக்.162- 176)



பயிலரங்கம் 1

## தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் சமூகவியல் வெளிப்பாடுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மகேந்திரா கலை அறிவியல் கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து ‘தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் சமூகவியல் வெளிப்பாடுகள்’ என்னும் பொருளில் 16.11.2012 முதல் 25.11.2012 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக முனைவர் அ. ஜெயக்குமார் செயல்பட்டார்.

16.11.2012 அன்று காலை பத்து மணி அளவில் நடந்த தொடக்க விழாவில் கல்லூரித் தமிழாய்வுத் துறைத்தலைவர் முனைவர் க. காந்தி வரவேற்புரையாற்றினார். மகேந்திரா கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஜி. பாரத்குமார் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் மே.து. இராசுகுமார் பயிலரங்க மையக் கருத்துரை வழங்கினார். ஒருங்கிணைப்பாளர் அ. ஜெயக்குமார் நோக்கவுரை வழங்கினார். கல்லூரி உதவிப் பேராசிரியர் பாலமுருகன் நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

**பேராசிரியர் மே.து. இராசுகுமார்**
**முனைவர் ச. ஈஸ்வரன்**
**பேராசிரியர் ஓ. முத்தையா**
**பேராசிரியர் சே. இராசு**
**முனைவர் அ. ஜெயக்குமார்**
**முனைவர் சி. அயோத்தி**







**முனைவர் சி. வாசுகி**
**பேராசிரியர் ம. மதியழகன்**
**திருமிகு மஞ்சுளாதேவி**
**முனைவர் க. மாரியப்பன்**
**முனைவர் மா. வெங்கடேசன்**
**முனைவர் வ. கிருஷ்ணன்**
**முனைவர் இரா. வசந்தமாலை**
**பேராசிரியர் வ. இராசரத்தினம்**
**முனைவர் நா. சிவா**
**பேராசிரியர் அரங்க. நலங்கிள்ளி**
**முனைவர் சு. இராமன்**
**முனைவர் பி. எழிலரசி**
**முனைவர் பெருமாள்முருகன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் இரா. சபாபதி**

ஆகிய அறிஞர்கள் இக் கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

25.11.2012 அன்று பிற்பகல் நடைபெற்ற நிறைவுவிழாவில் மகேந்திரா கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஜி. பாரத்குமார் தலைமையேற்றார். திருச்சித் தேசியக் கல்லூரிப் பேராசிரியர் இரா. சபாபதி வாழ்த்துரை வழங்கினார். பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துரைகளைக் கூறினர். கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் முனைவர் நா. சிவா, ப. குழந்தைவேலு ஆகியோர் தொகுப்புரை வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் நிறைவு விழாப் பேருரை நிகழ்த்தினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. ஜெயக்குமார் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

பயிலரங்கம் 2

## பண்பாட்டியல் நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை 19.11.2012 முதல் 28.11.2012 வரை ‘பண்பாட்டியல் நோக்கில் பதினெண் கீழ்க்கணக்கு’ என்னும் பொருளில் பத்து நாள் பயிலரங்கு ஒன்றினை நடத்தியது. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. முருகேசன் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

19.11.2012 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் க. முருகேசன் வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி விழாவினைத் தொடங்கி வைத்தார். கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலர் முனைவர் மா. ஆறுச்சாமி தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் முனைவர் மே.து. இராசுகுமார் கருத்துரை வழங்கினார். மைசூர் தூய பிலோமினா கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஆர். சீதா,






கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் த. முரளீஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. மணிமேகலை நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் மே.து. இராசுகுமார்
முனைவர் ஆர். சீதா
முனைவர் டி. உமாதேவி
பேராசிரியர் ப. மருதநாயகம்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
முனைவர் கூ.மு. புவனேசுவரி
முனைவர் த. கருப்பையா
முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் இ.ஆர். இரவிச்சந்திரன்
முனைவர் சு. ஞானப்பூங்கோதை
முனைவர் ஐ.கே. சுப்பிரமணியம்
முனைவர் இரா. விசயன்
முனைவர் இரா. மணிமேகலை
முனைவர் பொ.மா. பழனிச்சாமி
முனைவர் இரா. இளவரசு
முனைவர் மு. மதியழகன்
முனைவர் இ. சேனாவரையன்
முனைவர் சோ. பாண்டிமாதேவி
முனைவர் கோ. சங்கரவீரபத்திரன்
முனைவர் த. நீலண்டப்பிள்ளை
முனைவர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர் மு. வள்ளியம்மை
முனைவர் த. பகவதி
முனைவர் மா. கிருபாகரன்
முனைவர் வெ. சுகந்தா

ஆகிய அறிஞர்கள் இக் கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

28.11.2012 அன்று மாலை பயிலரங்க நிறைவு விழா நடைபெற்றது. தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் சு. சதீஷ்குமார் வரவேற்புரையாற்றினார். பயிலரங்க நிறைவு விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு சிறப்புரையாற்றினார். கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வி.மு. உமாபதி, அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ப. நீலாவதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பயிலரங்கக் கட்டுரைக் கோவையைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு வெளியிட பேராசிரியர் வி. மு. உமாபதி பெற்றுக்கொண்டார். தமிழ்த்துறைத் தலைவரும் ஒருங்கிணைப்பாளருமான க. முருகேசன் நன்றி நவின்றார். பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் ஆய்வியல் நிறைஞர்களும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுமாக 50 பேர் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

★

பயிலரங்கம் 3

## தொல்காப்பியச் செய்யுளியற் கோட்பாடுகளும் பிற்கால யாப்பியல் இலக்கணங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமும் இணைந்து 'தொல்காப்பியச் செய்யுளியற் கோட்பாடுகளும் பிற்கால யாப்பியல் இலக்கணங்களும்' எனும் பொருண்மையில் 03.12.2012 முதல் 12.12.2012 வரை பத்து நாள் பயிலரங்கு ஒன்றினை நடத்தின. பல்கலைக்கழகப் பேராசிரியர் சு. இராசாராம் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

03.12.2012 அன்று காலை முற்பகல் நடந்த தொடக்க விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் மு. பாண்டி வரவேற்புரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் வெ. மாணிக்கவாசகம் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தொடக்கவுரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் பெ. சுபாசு சந்திரபோசு கருத்துரை வழங்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சு. இராசாராம் நன்றி கூறத் தொடக்க விழா நிறைவுபெற்றது.

பேராசிரியர் து. சீனிச்சாமி
பேராசிரியர் க. முத்துச்சாமி
பேராசிரியர் நா. சுப்பிரமணியன்
பேராசிரியர் மு. மணிவேல்
முனைவர் க. கனகராசு
முனைவர் வ. செயலட்சுமி
பேராசிரியர் சு. வேங்கடராமன்
முனைவர் ப. வேல்முருகன்
முனைவர் மா. சிதம்பரம்

பேராசிரியர் மு. பாண்டி
பேராசிரியர் அ. பிச்சை
முனைவர் த. மலர்க்கொடி
முனைவர் இரா. இலட்சாராமன்
பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்
பேராசிரியர் அ. அறிவுநம்பி
முனைவர் சா. இரமேசு
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
பேராசிரியர் இரா. மோகன்
முனைவர் நிர்மலா மோகன்
முனைவர் நா. வள்ளி
பேராசிரியர் ம. கார்மேகம்
பேராசிரியர் தெ. முருகசாமி

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

12.12.2012 அன்று பிற்பகல் 3 மணியளவில் நிறைவு விழா நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் மு. பாண்டி வரவேற்புரையாற்றினார். கலைப்புல முதன்மையர் பேராசிரியர் ஏ. நாராயணமூர்த்தி தலைமை தாங்கினார். உலகச் செம்மொழிகள் உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் சோ.ந. கந்தசாமி நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர், ‘தொல்காப்பியர் செய்யுளியலை எழுதுவதற்காகத்தான் தொல்காப்பியத்தையே எழுதினார் என்றால் அது மிகையாகாது. தொல்காப்பியச் செய்யுளியல் கடல் என்றால் மற்ற இயல்கள் அதனை நோக்கிச் செல்லும் சிற்றாறுகள்’ என்றார். பயிலரங்கில் பயிற்சிபெற்ற முனைவர் பட்ட ஆய்வாளர் ம. மார்ஷல், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர் இரா. அஜிதா ஆகியோர் பயனுரை வழங்கினர். பத்து நாள் பயிலரங்கில் பங்கேற்ற ஆய்வாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களும் நூல்களும் வழங்கப்பட்டன. பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சு. இராசாராம் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

**பயிலரங்கம் 4**

## தொல்காப்பியம் - செய்யுளியல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மாநிலக்கல்லூரித் தமிழ்த்துறை ‘தொல்காப்பியம் - செய்யுளியல்’ என்னும் பொருண்மையில் 05.12.2012 முதல் 14.12.2012 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தியது. முனைவர் அர. செயச்சந்திரன் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

05.12.2012 காலை பத்து மணியளவில் நடந்த பயிலரங்கத் தொடக்க விழாவுக்கு மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா. சபாநாயகம் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப. மகாலிங்கம் வரவேற்புரையாற்றினார். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் இரா. சீனிவாசன் பயிலரங்க அறிமுகவுரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய மேனாள் இயக்குநர் பேராசிரியர் செ.வை. சண்முகம் பயிலரங்க மையப் பொருளுரை வழங்கினார். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகச் சிந்துவெளி ஆய்வு மைய மதிப்புறு ஆலோசகர் இரெ. பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. சிறப்புரையாற்றினார். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் முகிலை இராசபாண்டியன் பயிலரங்க நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் அர. செயச்சந்திரன் நன்றி நவிலத் தொடக்க விழா நிறைவடைந்தது.

பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் இரா. சம்பத்
முனைவர் அ. சதீஷ்
முனைவர் பா. ஜெய்கணேஷ்
முனைவர் ந. சண்முகம்
முனைவர் ச. குருசாமி
பேராசிரியர் க. முருகையன்
முனைவர் ய. மணிகண்டன்
முனைவர் இரா. இராசேந்திரன்
முனைவர் இரா. கலைவாணி
முனைவர் கே. பழனிவேலு
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் இந்திரா மனுவேல்
முனைவர் கண்ணியம் அ. சதீஷ்
செல்வி மு. கஸ்தூரி
முனைவர் இரா. கண்ணன்
முனைவர் க. சேக்மீரான்
முனைவர் ப. தாமரைக்கண்ணன்
முனைவர் இரா. சீனிவாசன்
திரு ப. திருஞானசம்பந்தம்

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

14.12.2012 அன்று மாலை நடைபெற்ற பயிலரங்க நிறைவு விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப. மகாலிங்கம் வரவேற்புரையாற்றினார். மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா. சபாநாயகம் தலைமையுரையாற்றினார். மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் சி.இ. மறைமலை சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு பயிலரங்க நிறைவுரையாற்றினார். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் அர. ஜெயச்சந்திரன் பதிவுரை வழங்கினார். பயிலரங்கில் பங்கேற்ற ஆய்வு மாணவர்கள் இருவர் கருத்துரை வழங்கினர். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் இரா. சீனிவாசன் நன்றிகூறப் பயிலரங்கம் இனிதே நிறைவடைந்தது.

★

**பயிலரங்கம் 5**

## மலையாள மரபிலக்கணங்களில் தொல்காப்பியத்தின் தாக்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறையும் இணைந்து மலையாள மரபிலக்கணங்களில் தொல்காப்பியத்தின் தாக்கம் எனும் பொருளில் 10.12.2012 முதல் 19.12.2012 வரை பத்து நாள் பயில்ரங்கினை நடத்தின. இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகக் கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறைப் பேராசிரியர் அ. ரோஸ்மேரி செயல்பட்டார்.

10.12.2012 அன்று முற்பகல் பத்து மணியளவில் நடந்த தொடக்க விழாவில் முனைவர் அ. ரோஸ்மேரி வரவேற்புரையாற்றினார். கேரள அரசின் முன்னாள் முதன்மைச் செயலர் ஆர். இராமச்சந்திரன் நாயர் இ.ஆ.ப. தொடக்கவுரையாற்றினார். புகழ்பெற்ற எழுத்தாளரும் மலையாளத் துறையின் முன்னாள் பேராசிரியருமான புதுசேரி இராமச்சந்திரன் தலைமையுரையாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னாள் பேராசிரியர் தி. நடராசன் நோக்கவுரையாற்றினார். கேரளப் பல்கலைக்கழக மலையாளத் துறை முன்னாள் பேராசிரியர் டி. பெஞ்சமின், முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் காஞ்சனா, கேரளப் பல்கலைக்கழகக் கிழக்கத்திய ஆய்வுகள் புலத்தலைவர் முனைவர் சி.ஆ. பிரசாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மொழியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் எஸ். பிரேமா நன்றி கூறத் தொடக்க விழா நிறைவு பெற்றது.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

முனைவர் தி. நடராசன்
முனைவர் காஞ்சனா
முனைவர் தூ. சேதுபாண்டியன்
முனைவர் எஸ். இராதாகிருஷ்ணன்
முனைவர் ஜேம்ஸ் ஆர். டானியல்
முனைவர் சி. சுப்பிரமணியப்பிள்ளை
முனைவர் எம். நயினார்
முனைவர் டி.பி. வேணுகோபாலப் பணிக்கர்
முனைவர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன்
முனைவர் பி. ஜெயகிருஷ்ணன்
முனைவர் அ. ஆதித்தன்
முனைவர் ஜெயகலா
முனைவர் ஹெப்சி ரோஸ் மேரி
முனைவர் என். இராஜேந்திரன்
முனைவர் வி. இரேணுகா தேவி
முனைவர் எம். இரமா
முனைவர் இ.வி.என். நம்பூதிரி
முனைவர் எஸ்.ஏ. ஷனவாஸ்
பேராசிரியர் எல். இராமமூர்த்தி
பேராசிரியர் நடராஜப்பிள்ளை
முனைவர் அ. சீனிவாசன்
பேராசிரியர் கி. நாச்சிமுத்து
பேராசிரியர் பி. பத்மநாபப் பிள்ளை

ஆகிய அறிஞர்கள் பயிலரங்கில் கலந்துகொண்டு ஆய்வுரை வழங்கிச் சிறப்பித்தனர்.

19.12.2012 அன்று பிற்பகல் நிறைவு விழா மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் அ. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. மைசூர் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன முன்னாள் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரும் மொழியியல் அறிஞருமான என். நடராஜப்பிள்ளை பயிலரங்க நிறைவுரையாற்றினார். மொழியியல் துறை ஆய்வு மாணவர் பார்வதி பிரசாத் பயிலரங்க அறிக்கை அளித்தார். முனைவர் அ. ரோஸ்மேரி, முனைவர் எல். டார்வின் ஆகியோர் பயிலரங்கம் பற்றிக் கருத்துரை வழங்கினர்.

★

பயிலரங்கம் 6

## பக்தி இலக்கியங்களில் செவ்வியல் இலக்கியக் கூறுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோவை தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியும் இணைந்து பக்தி இலக்கியங்களில் செவ்வியல் இலக்கியக் கூறுகள் எனும் தலைப்பில் 10.12.2012 முதல் 19.12.2012 வரை பயிலரங்கு ஒன்றினை நடத்தின. கல்லூரிப் பேராசிரியர் முனைவர் கா. திருநாவுக்கரசு ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

10.12.2012 அன்று காலை பத்து மணியளவில் பயிலரங்கத் தொடக்க விழா நடந்தது. கல்லூரிச் செயலர் பழ. தரும. ஆறுமுகம் வரவேற்புரையாற்றினார். சீர்வளர்சீர் பேரூரடிகளார் அவர்கள் ஆசியுரை வழங்கினார். சிரவையாதீனம் தவத்திரு குமரகுருபர அடிகள் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் தவத்திரு மருதாசல அடிகள் பயிலரங்கில் கலந்துகொண்ட சான்றோர்களை அறிமுகப்படுத்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சி. சுப்பிரமணியம் தொடக்க வுரையாற்றினார். மேனாள் அரசவைக்கவிஞர் புலமைப்பித்தன், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் ந. இரா. சென்னியப்பனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வி. உமாபதி நன்றிகூறத் தொடக்கவிழா நிறைவடைந்தது.

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் ச. சரவணன்
புல்வர் வ. ஞானப்பிரகாசம்
கா. திருநாவுக்கரசு
முனைவர் வி. உமாபதி
முனைவர் தெ. முருகசாமி
முனைவர் வெ. இராசேசுவரி
முனைவர் க. நாகராசு
புலவர் மணியன்
முனைவர் தி. சுரேஷ் சிவன்
முனைவர் பெ.கு. சாந்தகுமார்
முனைவர் அ.மா. இலட்சுமிபதிராசு
திரு மு.பெ. சத்தியவேல் முருகன்
முனைவர் இராம. இருசுப்பிள்ளை
முனைவர் சு. ஞானப்பூங்கோதை
முனைவர் சொ. சேதுபதி
முனைவர் கோ.ந. முத்துக்குமாரசுவாமி
தவத்திரு மருதாசல அடிகள்
முனைவர் இரா. குறிஞ்சி வேந்தன்
முனைவர் வே. கார்த்திகேயன்
முனைவர் ம. மனோன்மணி
பேராசிரியர் அ.அ. மணவாளன்

ஆகிய அறிஞர்கள் கலந்துகொண்டு ஆய்வுரை வழங்கினர்.

19.12.2012 அன்று மாலை 4 மணியளவில் பயிலரங்க நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் தவத்திரு மருதாசல அடிகளார் வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் அ.அ. மணவாளன்

தலைமை தாங்கினார். சீர்வளர்சீர் பேரூரடிகளார் அருளாசியுரை வழங்கினார். பழனியாதீனம் தவத்திரு சாது சண்முக அடிகளார் சிறப்புரையாற்றினார். கவிஞர் புவியரசு நிறைவுரையாற்றினார். கோவைக் கல்லூரிக் கல்வித் துறை மேனாள் இயக்குநர் முனைவர் கி. குமாரசாமி பயிலரங்கில் பங்கேற்ற ஆய்வு மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்கள் சிலர் பயிலரங்கப் பயனுரை அளித்தனர். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. திருநாவுக்கரசு நன்றி நவின்றார்.

★

**பயிலரங்கம் 7**

## செவ்வியல் இலக்கண, இலக்கியங்கள் பயிற்றுவித்தல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் புதுச்சேரி உஷாலட்சுமணன் கல்வியியல் கல்லூரி 12.12.2012 முதல் 21.12.2012 வரை செவ்வியல் இலக்கண, இலக்கியஙள் பயிற்றுவித்தல் என்னும் பொருண்மையில் பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தியது. கல்லூரி இணை முதல்வர் உஷாலட்சுமணன் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

12.12.2012 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தொடக்க விழாப் பேருரையாற்றினார்.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**முனைவர் தி. செல்வம்**
**முனைவர் ச. மனோகரன்**
**முனைவர் சிவ. மாதவன்**
**முனைவர் வீ. கோபால்**
**முனைவர் நா. இளங்கோ**
**முனைவர் ஆ. மணி**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் வ. ஜெயதேவன்**
**முனைவர் வெ.மு. ஷாஜகான் கனி**
**முனைவர் ச. குருசாமி**
**முனைவர் கோ. பழனிராஜன்**
**முனைவர் இரா. இலட்சாராமன்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**முனைவர் சீ. பக்தவத்சல பாரதி**
**முனைவர் ச. சம்பத்**
**முனைவர் சி. சித்ரா**
**மகாவித்துவான் வே. சிவசுப்பிரமணியம்**
**பேராசிரியர் கு. சிவமணி**



இப்பயிலரங்கில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். 21.12.2012 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் பயில்ரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுப் பேருரையாற்றினார்.

★

**பயிலரங்கம் 8**

## சங்க இலக்கியத்தில் சிறுகதை, நாடக உத்திகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி சங்க இலக்கியத்தில் சிறுகதை, நாடக உத்திகள் எனும் பொருண்மையில் 13.12.2012 முதல் 22.12.2012 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின. கல்லூரியின் இளங்கலைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா. இளவரசு பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

13.12.2012 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவைச் சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் வை. அய்யன் கோடீஸ்வரன் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார். இளங்கலைத் தமிழ்த்துறை தலைவர் இரா. இளவரசு வரவேற்புரையாற்றினார். முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. சிவனேசன் முன்னிலையுரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சோ. பாஸ்கரன் தலைமை தாங்கினார். தமிழூர் உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தின் மதிப்புறு இயக்குநர் பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் தொடக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி சிறப்புரையாற்றினார். விருதுநகர் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் முனைவர் க. பசும்பொன் கருத்துரை வழங்கினார். முனைவர் த. சந்திரகுமார் நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.






இப்பயிலரங்கில் பின்வரும் ஆய்வறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் வீ. இரேணுகாதேவி**
**முனைவர் ந. பொன்மதி**
**முனைவர் கி. பார்த்திபராஜா**
**முனைவர் இ. சேனாவரையன்**
**முனைவர் ப. தமிழரசி**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் உ. கருப்பத் தேவன்**
**பேராசிரியர் மு. பாண்டி**
**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**பேராசிரியர் மு. மதியழகன்**
**பேராசிரியர் ச. ஆரோக்கியநாதன்**
**பேராசிரியர் மு. மணிவேல்**
**முனைவர் ந. வேலுமணி**
**முனைவர் செ. கிளிராஜ்**
**முனைவர் பு.சி. கணேசன்**
**முனைவர் ஓ. பாலகிருஷ்ணன்**
**முனைவர் ரெ. முத்துராஜன்**
**முனைவர் ப. கனகா**
**முனைவர் ச. பாரிஜாதன்**
**முனைவர் க. முருகேசன்**
**முனைவ ந. சிவசுப்பிரமணியன்**
**பேராசிரியர் க. பஞ்சாங்கம்**
**முனைவர் பா. மதிவாணன்**
**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**

இந்தப் பயிலரங்கின் நிறைவு விழா 22.12.2012 அன்று மாலை நான்கு மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் சு. நயினார் வரவேற்புரையாற்றினார். முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. சிவனேசன் நோக்கவுரை வழங்கினார். கல்லூரி முதல்வர் சோ. பாஸ்கரன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி நிறைவுரையாற்றினார். கல்லூரித் தாளாளர் அ. சுபாஷ் சந்திர போஸ் பயிலரங்கப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ வழங்கிச் சிறப்பித்தார். இளங்கலைத்தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா. இளவரசு நன்றி நவிலப் பயிலரங்கம் இனிதே நிறைவடைந்தது.

★

**பயிலரங்கம் 9**

## மொழியியல் நோக்கில் தொல்காப்பியக் கல்வி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மொழியியல் நோக்கில் தொல்காப்பியக் கல்வி எனும் பொருண்மையில் 14.12.2012 முதல் 23.12.2012 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தியது. தமிழ்த்துறைத் தலைவர் இரா. செயராமன் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 14.12.2012 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் தலைமையுரையாற்றினார். திருவள்ளுவர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ப. குணசேகரன் சிறப்புரையாற்றினார்.

**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**முனைவர் பெ. செல்வகுமார்**
**முனைவர் க. இரவிசங்கர்**
**பேராசிரியர் கோ. சீனிவாசவர்மா**
**முனைவர் அ. காமாட்சி**
**முனைவர் எஸ். இராஜா**
**முனைவர் தூ. சேதுபாண்டியன்**
**பேராசிரியர் கி. அரங்கன்**
**முனைவர் எஸ். அருள்மொழி**
**முனைவர் டி. தர்மராஜ்**
**முனைவர் க. பூர்ணச்சந்திரன்**
**முனைவர் கோ. பழனிராசன்**
**முனைவர் கே. பழனிவேலு**
**பேராசிரியர் இரா. செயராமன்**
**முனைவர் வி. அனுராதா**

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர். திருவள்ளுவர் பல்கலைக்கழகம், திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி, வாலாஜாப் பேட்டை அரசுக்கல்லூரி, செய்யாறு அரசுக் கல்லூரி ஆகிய நிறுனங்களைச் சேர்ந்த ஆய்வு மாணவர்கள் 40 பேர் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

★

**பயிலரங்கம் 10**

## தமிழ் - சமஸ்கிருதம் செம்மொழிகளுக்கு இடையிலான பொதுமைக் கூறுகளும் இலக்கியக் கருத்தியலும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவையாறு அரசர் கல்லூரியும் இணைந்து தமிழ்- சமஸ்கிருதம் செம்மொழிகளுக்கு இடையிலான பொதுமைக் கூறுகளும் இலக்கியக் கருத்தியலும் என்னும் பொருண்மையில் 14.12.2012 முதல் 23.12 2012 வரை பத்து நாள்கள் பயிலரங்கினை நடத்தின.

14.12.2012 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்ற தொடக்கவிழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் தி.ந.ஆராவமுதன் தலைமை தாங்கினார். கல்லூரிச் செயலர் எஸ். இரகுநாதன் முன்னிலையேற்றார். உலகச் செம்மொழிகள் உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் சோ. ந. கந்தசாமி சிறப்புரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. திருமலை, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் எம். இரெத்தினசாமி, அரசர் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் அ. தங்கமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பேராசிரியர் நடராசன்
பேராசிரியர் பத்மநாபன்
பேராசிரியர் இரா. குருநாதன்
முனைவர் வி. வாசுதேவன்
முனைவர் சண்முக செல்வ கணபதி
பேராசிரியர் சீனிவாசன்
பேராசிரியர் எஸ். சந்திரபோஸ்
பேராசிரியர் சத்யா
பேராசிரியர் தெய்வநாயகம்
பேராசிரியர் கே. நடராஜன்
திரு சுதர்சன்
பேராசிரியர் திருஞானசம்பந்தன்
பேராசிரியர் பி. கலியபெருமாள்
பேராசிரியர் கண்ணன்
பேராசிரியர் அரங்கசாமி
பேராசிரியர் ஜான்சிராணி
பேராசிரியர் மணிமாறன்
பேராசிரியர் பரிமணன்
பேராசிரியர் நாகராஜன்
பேராசிரியர் இராதா செல்லப்பன்
பேராசிரியர் தேவிபிரசாத்
பேராசிரியர் கணேசன்
பேராசிரியர் கரிகாலன்
பேராசிரியர் கோதண்டராமன்
பேராசிரியர் அரங்க. திருநாராயணன்
பேராசிரியர் உஷா
பேராசிரியர் மன்சூர்
பேராசிரியர் இளமுருகன்
பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்
பேராசிரியர் தரமராஜ்
பேராசிரியர் செல்வராஜ்
பேராசிரியர் இலட்சுமி குமார்
பேராசிரியர் இராமன்
பேராசிரியர் விஷ்ணுபோதி
முனைவர் சி. சுந்தரேசன்
பேராசிரியர் ஜி. ஸ்ரீனிவாசு
பேராசிரியர் திராவிடராணி
முனைவர் வீரராகவன்
பேராசிரியர் தரணீதரன்

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 11

## தமிழ்ச் செவ்வியல் இலக்கிய விழுமியங்களும் மதிப்பீட்டுக் கல்வியும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கேவி மகளிர் கல்வியியல் கல்லூரியும் இணைந்து தமிழ்ச் செவ்வியல் இலக்கிய விழுமியங்களும் மதிப்பீட்டுக் கல்வியும் எனும் பொருண்மையில் 22.12.2012 முதல் 30.12.2012 முடிய பத்து நாள்கள் பயிலரங்கினை நடத்தின.

திருமிகு ஹரிவிரதானந்தா
முனைவர் ஏ. பாலமல்லிகாதேவி
திரு சீ. இராமச்சந்திரன்
பேராசிரியர் கு. அங்கமுத்து
முனைவர் இரா. முத்தையன்
முனைவர் வி. உஷாஸ்ரீ
முனைவர் ஞா. பழனிவேலு
முனைவர் என். இராஜகுமார்
திரு ப. தங்கமணி
பேராசிரியர் ஒ. முத்தையா
பேராசிரியர் எம். மணி
பேராசிரியர் அ. ஆரிப் முகம்மது
முனைவர் சி. ஜனகவல்லி
முனைவர் இரா. ஜானகி

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★



# பரிதிமாற்கலைஞர் அவர்கள் மறைவின்போது ம. கோபாலகிருஷ்ண ஐயர் பிரிவாற்றாது கூறியவை



சீரியசெந் தமிழொடுவான் சமயமெனும்
நற்பயிரும் செழிக்கு மாறு
மாரியென வரு "**பரிதி மாற் கலைஞன்**"
எனஓதும் மறைவல் லோனே!
**ஆரியகோ விந்தசிவன்** திருமதலாய்!
அமரர்உல கடைந்த தென்னே?
கூரியநன் மதியுடையாய்! **சூரியநா
ராயணனே!** கூறாய்! கூறாய்!

தழல் விரிக்கும் கண்ணுதல்நற் றமிழ் மணக்கும்
தென்மதுரைத் தலத்தைச் சார்ந்த
எழில் விரிக்கும் விளாச்சேரி இடம்விளங்க
இனிதுதித்த இறையே! கற்றைக்
குழல் விரித்துன் கொம்பனையாள் கூவியழக்
குதலைமொழிக் குமரரோடு
சுழல்மனத்த ளாய்த் **தமிழாம்** தாயலறச்
சென்ற தென்னே? சொல்லாய்! சொல்லாய்!!

முன்னாளிற் குறுமுனியார் வகுத்துரைத்த
முத்தமிழும் முறையின் ஓர்ந்தோய்!
பின்னேயும் கற்றுணர ஒன்றுமிலை
ஆதலினாற் பெரியோர் போற்ற
அந்நாளம் முனிவரற்கிம் முது மொழியை
அறிவுறுத்த ஆசான் ஆன
பொன்னார்செஞ் சடைப்பெருமான் வாய்கேட்கப்
போயினையோ? புலவர் ஏறே!

ம. கோபால கிருஷ்ண ஐயர், ம. 1915. அரும்பொருட்டிரட்டு. மதுரைத் தமிழ்ச் சங்கம். பக். 44, 45.

# கூட்டங்கள்

கூட்டம் 1

## மதிப்பீட்டுக் குழுக்கூட்டங்களின் தொகுப்பறிக்கை



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிறைவுற்ற, நிறைவுக்குரிய ஆய்வுத் திட்டப் பணிகளை மதிப்பிடும் மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள் 04.07.2012, 05.07.2012, 14.08.2012, 02.11.2012 ஆகிய நாள்களில் நடைபெற்றன. இக்கூட்டங்களில் பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் இரா. ஞானமூர்த்தி** - இயக்குநர் - தலைவர்
**முனைவர் அன்னிதாமசு** - ஒருங்கிணைப்பாளர்
**பேராசிரியர் க. இராமசாமி** - பொறுப்பு அலுவலர்
**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி** - முதுநிலை ஆய்வறிஞர்
**பேராசிரியர் ப. மருதநாயகம்** - ஆய்வறிஞர்
**பேராசிரியர் கு. சிவமணி** - ஆய்வறிஞர்
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்** - ஆய்வறிஞர்
**முனைவர் ச. மனோகரன்** - ஆய்வறிஞர்
**முனைவர் இரெ. குமரன்** - ஆய்வறிஞர்
**முனைவர் ந. அரணமுறுவல்** - ஆய்வறிஞர்

இக்கூட்டங்களில் மதிப்பிடப்பெற்ற திட்டப்பணி அறிக்கைகள் வருமாறு:

### 04.07.2012

1. **பேராசிரியர் பி.எஸ். சுப்பிரமணியம்** - திராவிட ஒப்பிலக்கணம் - இரண்டாம் பாகம்
2. **பேராசிரியர் அ. பாண்டுரங்கன்** - தமிழர்களின் தொல்சமயம்
3. **திருமிகு உஷாதேவி** - செவ்விலக்கியப் பாடல்கள்-அசைவுப்படம்
4. **பேராசிரியர் வி.எம். ஷாஜகான் கனி** - தொல்காப்பியப் புறத்திணையியல் நாடகத் தோற்றமும் வளர்ச்சியும்
5. **திரு குடவாயில் மு. பாலசுப்பிரமணியன்** - செம்மொழி இலக்கியங்களில் பல்கலை நோக்கில் ஆய்வு
6. **திரு தேவ. பேரின்பம்** - தமிழர் தத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (கி.பி.8ஆம் நூற்றாண்டுவரை தத்துவ வரலாற்றியல் பார்வையில்)
7. **முனைவர் தி. தாமரைச்செல்வி** - இலக்கிய இதழ்கள் வழித் திருக்குறள் ஆராய்ச்சி (1800 முதல் 1950 வரை)
8. **முனைவர் பெ. சுயம்பு** - 1. உ.வே.சா நூலக 351 அரிய நூல்களை நிழற்படமெடுத்துப் பாதுகாத்தல், 2. பதிப்பிக்கப்படாத உ.வே.சா நூல்களைப் பதிப்பித்தல்
9. **பேராசிரியர் ஏ. மரியசூசை** - நன்னன் சேய் நன்னன் நாட்டின் வரலாற்றுத் தடயங்கள்
10. **முனைவர் சு. சந்திரா** - சங்கத் தமிழ்த் தொன்மங்களும் கிரேக்கத் தொன்மங்களும்

### 05.07.2012

1. **பேராசிரியர் ச. கார்லோஸ்** - வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம்
2. **முனைவர் எஸ். முருகேசன்** - பௌத்த தலங்களும் நினைவிடங்களும் ஆவணப்படம் (தமிழ்ச் செவ்விலக்கியத் தொடர்புடன்)
3. **முனைவர் பழ. முத்தப்பன்** - சங்க இலக்கியத்தில் சைவசமய மூலக்கூறுகள்
4. **முனைவர் சு. இராசாராம்** - இணையத் தளத்திற்கான செம்மொழித் தமிழ் இலக்கணக் கலைச்சொற் களஞ்சிய அகராதி
5. **முனைவர் சு. சிவமணி** - சங்க இலக்கியத்தில் திணைமயக்கம்
6. **முனைவர் அ. மணவழகன்** - பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பல்துறை அறிவும் துறைசார் மேலாண்மையும்
7. **முனைவர் அ. ஆலிஸ்** - அமைப்பியல் நோக்கில் சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை)
8. **முனைவர் எஸ். சுபாஷ் சந்திரபோஸ்** - செம்மொழித் தமிழ் நூல்களில் வினைவழிப் பெயர்கள்
9. **முனைவர் எம். கோவிந்தராசு & முனைவர் பி. மாரியப்பன்** - செவ்வியல் இலக்கியங்களில் ஊர்வன
10. **முனைவர் மு. சாதிக் பாட்சா** - 1850 முதல் 2010 வரையிலான தமிழ்ச் செவ்வியல் இலக்கிய ஆராய்ச்சி நூல் தொகுப்பு
11. **முனைவர் ஜி. சுசீலா** - பண்டைய காலத் தமிழக ஊழிய மாந்தர் வாழ்வியல் (பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும்)
12. **முனைவர் எஸ். சுஜாதா** - விளவங்கோடு வட்டார அகராதி (கன்னியாகுமரி)

### 14.08.2012

1. **திரு பட்டாபிராமன்** - தமிழ் இதழ்களை அட்டவணைப்படுத்துதல்
2. **முனைவர் க. நெடுஞ்செழியன்** - பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்களில் மெய்யியல் கோட்பாடுகள்
3. **முனைவர் பெ. மதியழகன்** - கால்நடை வளர்த்தல் மற்றும் பராமரிப்பு - தமிழக வட்டார வழக்குகள்
4. **முனைவர் அ.கா. பெருமாள் & திரு செந்தீ நடராசன்** - பழந்தமிழர் பண்பாட்டு நினைவுச் சின்னங்கள்
5. **முனைவர் டி. வேலப்பன்** - சங்க இலக்கியத்தில் பொருளாதாரச் சிந்தனைகளும் வாழ்வியலும்
6. **முனைவர் ஆ. மணி** - பழந்தமிழ் இலக்கண இலக்கிய உரைகளில் குறுந்தொகை

7. முனைவர் எம். கோவிந்தராஜன் - சங்க இலக்கியம் இந்தி மொழிபெயர்ப்பு (எட்டுத்தொகை பத்துப்பாட்டு)
8. பேராசிரியர் தேவ சங்கீதம் - தமிழ்ச் செவ்வியல் இலக்கியம் (18 நூல்கள்) தெலுங்கு மொழிபெயர்ப்பு

02.11.2012

1. திரு ஹமீம் முஸ்தபா - சங்க இலக்கியப் பொது அறிவுத் திட்ட மதிப்பீடும் மாதிரிப் பரிந்துரையும்
2. முனைவர் இரா. காசிராஜன் - சிலப்பதிகார ஆய்வடங்கல்
3. முனைவர் டபிள்யூ. லிண்டா கிறிஸ்டி - துளு, கொடகு, கொங்கணி மக்களின் பண்பாட்டில் சங்க இலக்கியக் கூறுகள்
4. முனைவர் தி. மகாலட்சுமி - சிலப்பதிகார இலக்கியக் களஞ்சியம்
5. முனைவர் தி. சுப்பிரமணியன் - தமிழரின் பண்பாட்டு வரலாற்றில் சங்ககால இலக்கியமும் பெருங்கற்காலச் சின்னங்களும்
6. முனைவர் பா. இறையரசன் - சங்க காலச் சிறப்புப் பெயர்க்களஞ்சியம்
7. முனைவர் சி. திருமுருகன் - நற்றிணை பிரெஞ்சு மொழிபெயர்ப்பு
8. முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் - சிலப்பதிகார ஆய்வுகள் ஒருங்கிணைந்த மதிப்பீடு

★

கூட்டம் 2

## குறுந்திட்டப் பணிகளைத் தெரிவுசெய்யும் குழுக் கூட்டம்

2012-13 ஆம் ஆண்டு நிதிநல்கைக்கான ஆய்வுத் திட்டங்களைத் தெரிவு செய்வதற்கான முதற்கட்டத் தெரிவுக் குழுக் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 2012 ஆகஸ்டு 27,28 ஆகிய இரு நாள்களில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் க. இராமசாமி (பொறுப்பு அலுவலர்), பேராசிரியர் கு. சிவமணி(ஆய்வறிஞர்), முனைவர் மு. முத்துவேலு (பதிவாளர்), முனைவர் அன்னிதாமசு (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், விண்ணப்பிக்கப்பெற்றிருந்த 212 ஆய்வுத் திட்டங்களிலிருந்து 75 ஆய்வுத் திட்டங்கள் தெரிவுசெய்யப்பெற்று ஆய்வாளர்களை வல்லுநர் குழுவின் முன் ஆய்வுத் திட்டத்தினை வழங்க அழைப்பதென முடிவு செய்யப்பெற்றது.



★

கூட்டம் 3

## குறுந்திட்டப் பணிகள் - வல்லுநர் குழுக் கூட்டம்

2012- 13 ஆம் ஆண்டின் நிதிநல்கைக்கான ஆய்வுத் திட்டங்களைத் தெரிவு செய்யும் வல்லுநர் குழுக்கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 15.10.2012, 16.10.2012 , 17.10.2012 ஆகிய மூன்றுநாள்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் தெ. ஞானசுந்தரம், பேராசிரியர் வி.பி. தேவதத்தா, பேராசிரியர் க. இராமசாமி, பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, பேராசிரியர் ப. மருதநாயகம், முனைவர் அன்னிதாமசு (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நேர்முக அழைப்பில் கலந்துகொண்ட ஆய்வாளர்களுடனான கலந்துரைக்குப் பின் 46 ஆய்வுத் திட்டங்கள் நிதிநல்கைக்குத் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் 42 ஆய்வுத் திட்டங்களுக்கு ஆணை வழங்கப்பெற்றுள்ளது.

2012 - 13 ஆம் ஆண்டு நிதிநல்கைக்குத் தெரிவு செய்யப்பெற்ற ஆய்வுத் திட்டங்கள்

1. கா. இராஜன் - கொடுமணல் அகழாய்வு: சங்க காலம்
2. கி. அரங்கன் - குறுந்தொகை: சொல், தொடர் ஆய்வு
3. சே. செந்தமிழ்ப் பாவை - செம்மொழி இலக்கியத் தொன்மங்கள்: சமூகப் பண்பாட்டியல் ஆய்வு
4. எஸ். மார்கரெட் பாஸ்டின் - சிலப்பதிகாரத்தில் இசையும் நாட்டியமும்
5. பெ. சுயம்பு - உ.வே.சா நூலகச் செவ்வியல் சுவடி, அச்சு நூல்களின் ஆய்வடங்கல் (விளக்க நூற்றொகை)
6. சி. சாந்தலிங்கம் - கி.பி. 6 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழகத்து நடுகற்கள் மின்னணுவாக்க முறையில் ஆவணப்படுத்துதல்.
7. வி.பி.யதீஷ்குமார் - சங்க கால அகழாய்வுக் களங்கள் - சேர நாடு குறித்த கள ஆய்வு
8. எஸ். அகஸ்டின், சி. கபிலன் - Development, upgradation and Maintenance of Android/ iphone/ ipad Mobile for Classical Tamil Texts with easy interpretation
9. இல. குளோறியா சுந்தரமதி - சங்க இலக்கியத்தில் நெய்தல் திணைப்பாடல்கள் - பகுப்பாய்வு அணுகுமுறை
10. பி.சி.கோகிலா - திருக்குறள் குஜராத்தி மொழிபெயர்ப்பு
11. மு. இளமுருகன் - மணிமேகலையில் சங்க நூல்கள், நீதிநூல்கள் ஆகியவற்றின் செல்வாக்கு
12. தி. கமலி - தமிழ் - சீன இலக்கியங்களில் போர்முறை
13. பி. செல்வ சண்முகம் - உடம்பினை உறுதி செய்யத் திருமூலர் காட்டும் வழிமுறைகள்
14. கே. முருகேசன் - திருக்குறள் உரைவேறுபாடுகள்
15. அ.அறிவுநம்பி - தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் முருகனியம்
16. ந. வேலுசாமி - பழந்தமிழக கோயில்களும் கலைகளும்: கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்
17. க. நெடுஞ்செழியன் - சங்க இலக்கிய அகத்திணை மரபுகளும் இந்தியக் காதல் இலக்கியங்களும்

18. **எஸ். இராஜவேலு** - சங்ககாலக் கடற்கரையோரக் குடியிருப்புகளும் துறைமுகங்களும் (இராமேசுவரம் முதல் பூம்புகார் வரை)

19. **ந. அதியமான்** - சங்ககாலக் கடற்கரையோரக் குடியிருப்புகளும் துறைமுகங்களும் (கன்னியாகுமரி முதல் இராமேசுவரம் வரை)

20. **ச. வே. சுப்பிரமணியன்** - தொல்காப்பியம் உலக இலக்கணம்

21. **செ. சாரதாம்பாள்** - தொல்காப்பியரும் அரிஸ்டாட்டிலும் (தொல்காப்பியச் செய்யுளியல்)

22. **எஸ். வீரலெட்சுமி** - சங்க அகப்பாடல்களில் உணர்வுசார் அறிவு

23. **தே.வீ. சுமதி** - சங்க இலக்கியத்தில் அளபெடைச் சொற்கள்

24. **ஏ. விஜயபாஸ்கர்** - அரிக்கமேடு ஆவணம்

25. **ஜி. முத்துலட்சுமி** - கோவை மாவட்டப் பழங்குடி மக்கள் வாழ்வியலில் சங்க மரபுகள்

26. **ஏ. பெனிட்டா** - தமிழ்- சீனச் செவ்வியல் இலக்கியங்கள் - ஒப்பாய்வு

27. **ஆர். மதிவாணன்** - பிற இந்திய மொழிகளில் தமிழ்ச் சொற்களின் இருப்பு

28. **பா. மதிவாணன்** - சங்க இலக்கியப் பண்டைய உரையாசிரியர்கள்தரும் இலக்கணக் குறிப்புகள்

29. **இரெ. மல்லிகா** - செவ்வியல் இலக்கியங்களில் பௌத்தக் கலைப் பண்பாட்டு விழுமியங்கள்

30. **ஜி. சுந்தர்** - Developing a Technical Glossary of Terms in Tamil for Indus and Related fields of research

31. **வி. தனலட்சுமி** - Dependency parsar for Tamil Classical Literature: kuruntokai

32. **எஸ். இராஜா** - Lexical structure of Cilappatikaram

33. **ஆர். விவேகானந்தகோபால்** - திருக்குறள் மராத்தி மொழிபெயர்ப்பு: கவிதை வடிவில் (மு.வ. உரையுடன்)

34. **எம். அரவிந்த் குமார்** - பண்டைத் தமிழரின் நாணயவியல் மரபு (ஆவணப்படம்)

35. **இரா. தாமோதரன்** - தமிழ்ச் செவ்வியல் படைப்புகள் கட்டமைக்கும் அறிவு மரபு

36. **ஏ. கலீல் இரகுமான்** - கபிலரின் ஆளுமையும் படைப்பாற்றலும்

37. **கும்பகோணம் ஏ. கஜேந்திரன்** - குறிஞ்சிப்பாட்டும் முல்லைப்பாட்டும்: இசைக்குறுந்தகடு, சுரதாள இசைக்குறிப்புகள்

38. **கு. வெங்கடாசலம்** - தமிழர் கணக்கியல் - சிந்துவெளி முதல்

39. **நா. நந்திவர்மன்** - Translations of Classical Tamil Texts in Classical and Foreign languages by scholars of French Colonial period and post - independence period till 21st century

40. **பா. அருளி** - பழந்தமிழர் உருவாக்கிய மண்கலங்களும் அவற்றின் வளர்ச்சி வகையும் - உலகமொழிகள் சிலவற்றுள் அவற்றின் பெயர்ப்பதிவுகளும் - வேரியல் நோக்கு

41. **ந. கடிகாசலம்** - சங்கப்பாடல்களும் சீனப்பாடல்களும்

42. **ஆர். வின்செண்ட்ராய்** - மருதத்திணை வாழ்வு (காணொளி நாடகம்)

★

**கூட்டம் 4**

## கருத்தரங்குகள், பயிலரங்குகளைத் தேர்வுசெய்யும் வல்லுநர் குழுக் கூட்டம்



2012-13 ஆம் நிதியாண்டில் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்த விரும்பும் பல்வேறு கல்வி நிறுவனங்களைத் தேர்வு செய்யும் வல்லுநர் குழுக் கூட்டம் 12.09.2012 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் இரா. ஞானமூர்த்தி**
இயக்குநர், செதமநி - தலைவர்

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
முதுநிலை ஆய்வறிஞர், செதமநி - அக வல்லுநர்

**பேராசிரியர் கு. சிவமணி**
ஆய்வறிஞர், செதமநி - அக வல்லுநர்

**பேராசிரியர் சோ.ந. கந்தசாமி**
ஆட்சிக்குழு உறுப்பினர், செதமநி- புற வல்லுநர்

**பேராசிரியர் இராம. குருநாதன்**
சென்னை - புற வல்லுநர்

**பேராசிரியர் வி.பி. தேவதத்தா**
சென்னை - புற வல்லுநர்

**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
ஆய்வறிஞர், செதமநி - ஒருங்கிணைப்பாளார்

இந்தக் கூட்டத்தில் 49 நிறுவனங்களுக்குக் கருத்தரங்க நிகழ்ச்சி நடத்தவும் 32 நிறுவனங்களுக்குப் பயிலரங்க நிகழ்ச்சி நடத்தவும் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டது.

★

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள்.1031)

கூட்டம் 5

## முனைவர் பட்ட மேலாய்வு, முனைவர் பட்ட ஆய்வு உதவித்தொகை - நேர்காணலும் தேர்வுக் குழுக் கூட்டமும்



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் எழுத்துத் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு முனைவர் பட்ட மேலாய்வு, முனைவர் பட்ட ஆய்வு உதவித்தொகை வழங்குவதற்கான நேர்காணலும் தேர்வுக் குழுக்கூட்டமும் 2012 திசம்பர் 04,05 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இக்குழுவில் இடம்பெற்றோர்:

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**

முதுநிலை ஆய்வறிஞர், செதமநி - தலைவர்

**பேராசிரியர் ப. மருதநாயகம்**

ஆய்வறிஞர், செதமநி - உறுப்பினர்

**பேராசிரியர் கு. சிவமணி**

ஆய்வறிஞர், செதமநி - உறுப்பினர்

**பேராசிரியர் மா.ரா. அரசு**

பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் - புற வல்லுநர்

**பேராசிரியர் சுதந்திரமுத்து**

பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், சென்னை - புற வல்லுநர்

**பேராசிரியர் மே.து. இராசுகுமார்**

ஆய்வறிஞர், செதமநி - உறுப்பினர்/அமைப்பாளர்

நேர்காணலில் பங்கேற்ற மாணவர்களில் 3 மாணவர்களுக்கு முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகையும் 28 மாணவர்களுக்கு முனைவர் பட்ட ஆய்வு உதவித்தொகையும் வழங்க இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

★

கூட்டம் 6

## நூல் திறனாய்வுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நூல்களின் திறனாய்வுக் கூட்டம் 11.12.2012 அன்று பிற்பகல் 4 மணியளவில் சென்னைச் சேப்பாக்கம் சுவாமி சிவானந்தா சாலையில் உள்ள பொறியாளர் கழக அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமையேற்ற நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. ஞானமூர்த்தி அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 10 முதன்மைத் திட்டங்களை உருவாக்கி அவற்றை நிறைவேற்றி வருகிறது. அதன் வெளிப்பாடாக நூல்களை வெளியிட்டு வருகிறது. இந்தத் திறனாய்வுக் கூட்டம் நிறுவன வெளியீடுகள் குறித்து அறிஞர்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பாக அமையும் என்று குறிப்பிட்டார்.

இந்தத் திறனாய்வுக் கூட்டத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மொழிபெயர்ப்புத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. மருதநாயகம் அவர்கள் எழுதிய 'Ancient Tamil Poetry and Poetics: New Perspectives' என்னும் நூலினை மாநிலக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் இ. மறைமலை அவர்கள் திறனாய்வு செய்தார்கள். சங்க இலக்கியங்களின் தொன்மையையும் தனித்தன்மையையும் உலகச் செவ்வியல் இலக்கியங்களோடு ஒப்பிட்டு விரிவான ஆய்வு செய்திருக்கிறார் பேராசிரியர் மருதநாயகம். தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் கிரேக்க, இலத்தீன், வடமொழி இலக்கியங்களோடு ஒப்பிடுகையில் எவ்வகையில் எல்லாம் சிறந்து விளங்குகின்றன என்பதை எடுத்துரைக்கிறது இந்நூல் என்று பேராசிரியர் மறைமலை எடுத்துரைத்தார்கள். இந்த நூலினை வெளியிட்டதில் செம்மொழி நிறுவனம் பெருமிதம் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

நிறுவன மொழியியல் துறைத்தலைவர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் அவர்கள் எழுதிய 'Dyanamics of Tamil Finite System' என்னும் நூலினைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் கி. அரங்கன் அவர்கள் திறனாய்வு செய்தார்கள். பேராசிரியர் அரங்கன் அவர்கள் தமிழ் மொழியியல் ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு 'Dyanamics of Tamil Finite System' என்னும் நூல் வழிகாட்டும் என்று குறிப்பிட்டு மரபிலக்கணமும் மொழியியல் துறைசார் அறிவும் பெற்றவர்கள் தொல்காப்பியம் தொடங்கித் தமிழ் இலக்கணத்தின் சிறப்புக்களை எடுத்துரைக்க முடியும். அந்த வகையில் பல புதிய முயற்சிகளை இந்த நூல் வெளிப்படுத்தி உள்ளது. நூலின் கருத்துக்கள் அனைவருக்கும் ஏற்புடையதாக அமைவதில் கருத்து வேறுபாடு இருந்தாலும் புதிய ஆய்வுக் களங்களை இது அமைத்துள்ளது என்று குறிப்பிட்டார்.

அறிமுக உரையாற்றிய பேராசிரியர் க. இராமசாமி அவர்கள் இவ்விரு நூல்களும் உருவானதற்குக் காரணமாக இருந்த நிறுவனத்தின் இரு ஆய்வுத் திட்டங்கள் குறித்தும் அவற்றின் உருவாக்கம் குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் வரவேற்றார். நிகழ்ச்சியின் நிறைவாக நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவல் நன்றி கூறினார்.



# தொல்லியல் செய்தி

## வரலாற்றுக்கு முந்தைய வெள்ளரிக்கொம்பை பாறை ஓவியங்கள்



பாதையெல்லாம் காட்சிக்கூடமாய்ப் போகன்வில்லா மலர்களும் ஆரஞ்சு மலர்களும் பூத்திருக்கும் எழில் கொண்ட ஊர் வெள்ளரிக்கொம்பை. காப்பித் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களும் சூழ மிளகுக் கொடியும் பலா மரமும் மாதுளைச் செடியும் மாமரமும் இலவமரமும் கொய்யாமரமும் பாக்குமரமும் பசுமையாய் வளர்ந்திருக்கும் சூழல் கொண்டது அது. போர்க்காலத்தில் பகைவர்களிடம் இருந்து தப்பிக்க மறைந்து வாழக்கூடிய சூழலில் உள்ளடங்கி அமைந்த ஊர் வெள்ளரிக்கொம்பை. வெள்ளரிக்கொம்பைக் குறும்பர்களைப் பற்றி இந்து நாளிதழில் கே.ஜெசி பல செய்திகளை வெளியிட்டுள்ளார்.

குறும்பர்களின் வாழிடமான வெள்ளரிக்கொம்பை கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. கோத்தகிரியிலிருந்து 16 கி.மீ தொலைவில் உள்ள இவ்வூர் வரலாற்றுக்கு முந்தைய கால இருப்பிடமாகும்.

அங்குப் பாறையில் வரையப்பட்ட காறை ஓவியம் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சார்ந்தது என்பதையும் நீலகிரியில் வாழ்கின்ற குறும்பர்கள் பழங்குடிச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதையும் உறுதிசெய்கின்றது.

மலைப்பாறையில் மிகப்பெரிய வழிபாட்டு உருவம் தீட்டப்பட்டுள்ளது. நீண்ட உதடுகளோடும் வெட்டப்பட்ட தலையைத் தன் வலது கையில் பிடித்துக்கொண்டுள்ள நிலையிலும் அது உள்ளது. தலை வெட்டப்பட்ட முண்டம் கீழே கிடப்பதுபோல் வரையப்பட்டுள்ளது. அந்த உருவத்தைச் சுற்றிப் புள்ளிகளால் ஆன கோடு போடப்பட்டுள்ளது. வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் அந்த உருவத்தை முக்கியமான உருவமாகவும் தங்கள் வழிபாட்டிற்கு அல்லது பண்பாட்டுக்குரிய தலைவனாகவும் கருதியுள்ளார்கள் என்று உதகைப் பழங்குடிகள் ஆய்வு மையத்தின் இயக்குநர் முனைவர் சி. மகேசுவரன் குறிப்பிட்டுள்ளார்.

கோவில் சுவர்களில் வரைந்துள்ள மனிதகுல வளர்ச்சியைக் காட்டும் முந்தைய ஓவியங்களின்மீது குறும்பர்களின் குருமார்கள் ஆண்டுதோறும் வண்ணம் தீட்டுகிறார்கள். ஓவியத்தின் ஆவி வரலாற்றுக்கு முற்பட்ட கால உருவத்திடம் சென்று மீண்டும் இளமையாகி வருவதாக நம்புகிறார்கள். குறும்பர்கள் அவர்களின் பண்பட்டு உருவத்திற்குக் கமுக்கமாக வழிபாடு நடத்துகிறார்கள். அதனால் அவர்களுடைய ஊருக்கு வளம் பெருகும் என்று கருதுகிறார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த மேற்கு மிச்சிகன் பல்கலைக்கழக மாந்தவியல் துறைப் பேராசிரியர் வெள்ளரிக்கொம்பை ஓவியங்களை ஆவணப்படுத்தியுள்ளார். இப்போதுள்ள குறும்ப ஓவியர்களில் ஒருவரான கிருட்டிணன் இந்த ஓவியங்களைக் குறும்பர் முன்னோர் வாழ்க்கை முறையைச் சித்திரிப்பதாகக் கூறுகிறார். அவை அறுவடை, விழாக்கள், இறப்புப் போன்ற சடங்குகளையும் அவர்கள் அஞ்சக்கூடிய பாம்பு, முனி போன்றவற்றையும் சித்திரிப்பதாகக் கருதுகின்றார். பெருந்தெய்வம், நீர்த்தெய்வம், குடில்கள், பரண்கள் ஓவியத்தில் உள்ளன. முண்டத்தின் காலில் உள்ள முனி சங்கிலி கெட்ட ஆவியைக் குறிப்பதாகக் கூறுகிறார்.

அந்த ஓவியத்தில் உள்ள சிவக்குக் குறுக்கு அடையாளம் சிந்துவெளி அடையாளத்தைப் போல் உள்ளது. இது வளத்தைக் குறிப்பதாகும். வரலாற்றுக்கு முற்பட்ட கால எச்சங்களை ஆலுக் குறும்பர்கள் தங்கள் முன்னோர்களின் கொத்தாகக் கருதுகின்றனர். இந்த ஓவியங்கள் கி.மு. 3500 ஆண்டுகளுக்கு முந்தையவையாகும்.

குறும்பர்களின் குகைகளைத் தங்கள் வாழ்விடமாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தேன் எடுப்பதில் வல்லவர்கள். அதற்கு மூங்கில் கணுக்களை ஏணியாகப் பயன்படுத்துகிறாகள். அவர்கள் வண்ணம் தீட்ட கையால் செய்த தூரிகைகளையும் நார்களையும் மரத்துண்டுகளையும் பயன்படுத்துகின்றன. மூங்கில் ஏணியில் ஏறி வாயில் தூரிகையை வைத்துக்கொண்டு வண்ணம் தீட்டியிருக்கக் கூடும்.

நீலகிரி மாவட்ட முதல் ஆட்சித் தலைவர் ஜேம்ஸ் வில்கின்சன் பிரிக்ஸ், அந்தோணி வாக்கர், பால் ஹாக்கின்ஸ், வில்லியம் நோபல் போன்றோர் இந்த ஓவியங்களைப் பற்றி ஆய்வு செய்துள்ளார்கள். ஆனால் அவர்கள் உள்ளூர் மக்கள் போல் பொருத்திப்பார்க்க முடியவில்லை என்கிறார் சி.பி. இராமசாமி சுற்றுச்சூழல் கல்வி நடுவத்தைச் சேர்ந்த குமரவேல்.

*நன்றி:* The Hindu, 11.10.2012

http://www.thehindu.com/arts/history-and-culture/a-chronicle-of-thekurumbas/article3987829.ece

# தென் அராபிய ஓமனில் தமிழி எழுத்துப் பொறித்த பானை ஓடு

தமிழி எழுத்துப் பொறித்த பானை ஓடு ஒன்று தென் அராபியாவில் உள்ள ஓமனில் கோர் ரோரி (Khor Rori) பகுதியில் சும்குரம்(Sumhuram) என்ற ஊரில் 2006 ஆம் ஆண்டுக் கிடைத்தது. அதில் ணந்தை கீரன் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கி.பி. முதல் நூற்றாண்டுக்கு முந்தையதாகக் கருதப்படும் இது வரலாற்றில் புதிய பாதையைத் திறந்துள்ளது. தமிழகத்தின் பண்டைக் கடல் வணிகம் எகிப்து - செங்கடல் பகுதிகளுக்கிடையே மட்டுமின்றி அராபியப் பகுதிகளிலும் நடந்து வந்ததை இது நிறுவுகிறது.




ஓமன் பகுதியில் அகழாய்வு செய்த இத்தாலியக் குழு இந்தப் பானை ஓட்டைக் கண்டெடுத்தது. அகழாய்வில் ஈடுபட்ட அலெக்சியா பாவன் (Alexia Pavan) என்னும் இத்தாலியத் தொல்லியலாளர், கேரளப் பட்டண இந்தியக் கடல் வணிகமும் தொல்லியல் தொழில்நுட்பமும் என்ற தலைப்பில் கொச்சியில் நடந்த பன்னாட்டுப் பீங்கான் தொல்பொருள் ஆய்வரங்கில் அதைக் காட்சிப் படுத்தியுள்ளார். இந்து மாக்கடல் தொல்லியல் சார்ந்த பன்னாட்டு ஆய்வரங்கில் பானைகள் காட்சிக்கும் வைக்கப்பட்டிருந்தன. கேரள வரலாற்று ஆய்வு மன்ற இயக்குநர் பி.ஜே. செரியனும் இலண்டன் பிரிட்டீஷ் அருங்காட்சியக ரோபர்ட்டா டோம்பரும் இணைந்து ஆய்வரங்கை நடத்தியுள்ளனர்.

புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கா. இராசன், இந்தியத் தொல்லியல் துறை மண்டல இயக்குநர் டி. தயாளன், தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைத்தலைவர் வி. செல்வக்குமார் ஆகியோர் மேற்குறிப்பிட்ட பானை ஓட்டைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பானை ஓடு சும்குரம் நகரத்தின் மிக முக்கியமான குடியிருப்புப் பகுதியில் கிடைத்தது. இது சமையல் பாத்திரத்தின் கைப்பிடியாக இருக்கலாம் என்றும் இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டுக்குச் சற்று முன்னதாக இருக்கலாம் என்றும் அவ்வாய்வரங்கில் கலந்துகொண்ட முனைவர் பாவன் குறிப்பிட்டுள்ளார். அவ்விடத்தில் பேரளவில் இந்தியப் (தமிழகப்) பொருள்களான மணிகள், காசுகள், பானைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கும் தென் அராபியக் கடற்கரைக்கும் இருந்த நெருங்கிய உறவை இவை வெளிப்படுத்துகின்றன என்று பாவன் கருதுகிறார்.

### தனியார் பெயர்

பேராசிரியர் கா. இராசன் நந்தை கீரன் என்கிற ஆள் பெயர் இரண்டு கூறுகளைக் கொண்டது என்கிறார். அந்தை மூத்தோரைக் குறிக்கும் மரியாதை ஒட்டு. இதைக் குழந்தை - சம்பன், அந்தை அசுதன், கொற்றந்தை எனத் தமிழ்க் கல்வெட்டுக்களில் காணலாம். கீரன் ஓர் ஆளின் பெயர். தமிழ்ச் சங்க காலப் புலவர்களில் 20 பேருக்கு மேல் கீரன் என்ற பெயரில் உள்ளனர். எனவே உடைந்த பானை ஓட்டில் உள்ள பெயர் புகழ்பெற்ற ஒரு பெருவணிகரின் பெயராக இருக்க வேண்டும் என்று இராசன் கருதுகிறார்.

பொதுவாக இந்தியர்களின் வணிகத் தொடர்பு எகிப்தியப் பகுதிகளுடன் தான் இருந்தது. செங்கடல் துறைமுகங்களான குவெசிர் அல் காதிம் (Quasir al-Qadim), பெரெனிகே (Berenike) ஆகியவைதான் இதுவரை ஆய்வு செய்யப்பட்டுள்ளன. காதிம் நகரில் நடந்த அகழாய்வில் கணன் (கண்ணன்), சாதன் (சாத்தன்), பானை ஓரி என்ற பெயர்களைத் தமிழி எழுத்தில் பொறித்த பானை ஓடுகளும் பெரெனிகேவில் கொற்றபுமன் (கோற்பூமான்) என்று தமிழி எழுத்தில் பொறித்த பானை ஓடும் கிடைத்துள்ள செய்தி 1990க்கு முன்னரே வெளிவந்தது. கோரோரி கண்டுபிடிப்பு தென்னிந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து நடந்த வணிகம் அராபியா முதலிய நாடுகளுடனும் நிகழ்ந்துள்ளதை நிறுவுகிறது என்கிறார். மணப்பொருள்களான மிளகு, இலவங்கம் முதலியவற்றோடு குதிரை வணிகமும் இந்தப் பகுதியில் அப்போது நடந்திருக்கலாம் என்று இராசன் கருதுகிறார். பைசா பல்கலைக்கழகம் மேற்கொண்ட இந்த அகழய்வுகள் தெற்கு அரேபியப் பகுதிகளுடன் தமிழகம் பண்டைய மணப்பொருள் வணிக உறவுகளோடு பண்பாட்டு உறவுகளையும் கொண்டிருந்ததை உறுதிப்படுத்துகின்றன என்கிறார்.

தமிழி எழுத்துப் பற்றி நடந்துள்ள ஆய்வுகளை வைத்துப் பார்க்கும்போது கோர்ரோரி எழுத்துப் பொறிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது என்கிறார் கேரள வரலாற்று ஆய்வு மன்ற இயக்குநர் முனைவர் செரியன். இந்தக் கல்வெட்டுச் சான்றானது வரலாற்றுக்கு முந்தைய கால (எழுத்து வரலாறு தொடங்கிய கால) ஊழியில் இடம்பிடித்துள்ளதை அவர் சுட்டுகிறார். எகிப்துக்கும் அரேபியாவுக்கும் நடுவில் உள்ள செங்கடலின் கரைகளில் உள்ள கோர்மோஸ், பெரெனிகே மற்றும் இலங்கையில் சில இடங்களில் மட்டுமே இந்தியாவுக்கு வெளியே தமிழில் பொறிப்புகள் கிடைத்துள்ளன.

### இசுலாமுக்கு முந்தைய காலம்

இந்த வகையில் இசுலாமுக்கு (கி.பி.600க்கு) முந்தைய காலத் துறைமுக நகரமாக இருந்த கோர்ரோரி சிறப்பிடம் பெறுகிறது. இது தென் அரேபியாவுக்கும் இந்தியாவுக்கும்

இடையேயுள்ள வணிகத் தொடர்பை நிறுகிறது என்கிறார் செரியன்.

சும்குரம் துறைமுகம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரை செயல்பட்டது. தமிழகத்திற்கும் நன்னிலக் கரைப் பகுதி நாடுகளுக்கும் இடையில் நடந்த நெடுந்தூரக் கடல் வணிகத்தில் கி.மு 1- கி.பி. 4 நூற்றாண்டுகளில் செங்கடல் கரைப் பகுதிகள் மட்டுமின்றித் தென் அரேபியக் கடலோரப் பகுதியும் மெசபதாமியா (சுமேரியா, எலாம்) பகுதியும் அந்தந்தப் பகுதிகளின் பின்புல நாடுகளும் பங்கேற்றன என்பதன் முக்கியமான ஆதாரம் கோத்ரோரி கண்டுபிடிப்பு ஆகும் என்கிறார் செரியன்.

அண்மையில் செரியன் ஓமன் நாட்டில் சும்குரம்(கோர்ரோரி) நகரிலும் அல்பலித்(Al Baleed) என்னும் இடத்திலும் கள ஆய்வு செய்துள்ளார். இதுவரை பல காரணங்களால் தென் அரேபியப் பகுதியின் நிலவியல் - பண்பாட்டியல் முக்கியத்துவம் பற்றியும் அப்பகுதிக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் உள்ள உறவுகள் பற்றி ஆய்வு செய்யப்படாதது வருந்துதற்குரியதாகும். அப்பழங்கால வணிகம் பற்றிய விரிவான சான்றுகள் தென்னிந்திய இலக்கியங்களில் இல்லாத நிலையில் அகழாய்வுச் சான்றுகளும் ஓரளவிற்கு மாந்தவியல் சான்றுகளும் (எ.கா:- தொன்மங்கள்) உதவுகின்றன.

### சுட்டபின் பொறித்த எழுத்து

கோர்ரோரி பானை சுடப்பட்ட பின்னர்த் தமிழி எழுத்து அதில் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே அகழாய்வுச் சின்னம் என்ற நோக்கிலும் பொறித்துள்ள செய்தியின் அடிப்படையிலும் இது முக்கியமானதாகும். எனவே பிற பகுதிகளில், குறிப்பாகத் தென்னிந்தியாவில் இதையொத்த பிற சான்றுகளைத் தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிப்பதை நாம் அறைகூவலாக மேற்கொள்ள வேண்டும் என்கிறார் முனைவர் செரியன்.

கேரள வரலாற்று ஆய்வு மன்றம் பிற அமைப்புகளோடு சேர்ந்து எர்ணாகுளம் அருகே பட்டணம் என்னும் இடத்தில் அகழாய்வு செய்து வருகிறது. தமிழ்ச் சங்க காலத்தில் வளமிக்க துறைமுகமாக இருந்த முசிறிதான் இந்தப் பட்டணம். இந்த அகழாய்வில்தான் இந்தியாவில் வேறெங்கும் இதுவரை கிடைத்திராத அளவுக்குப் பெரும் எண்ணிக்கையில் 3384 மதுச்சாடித் (torpido jar) துண்டுகளும் 1720 நீலநிறச் (turquiose) சில்லுகளும் கிடைத்துள்ளன. தமிழகத்துக்கும் தென் அராபியப் பகுதிகளுக்கும் இடையில் நடந்த பெரும் வணிக நடவடிக்கைகளை இது சுட்டுகிறது என்கிறார் செரியன். தென் அராபியா - கோர்ரோரி - அல்பலீத் பகுதிகள் உள்ளிட்டவை நறுமண நாடு என்று அழைக்கப்பட்டன. பட்டணத்தில் அகழ்ந்த பெரும்பாலான பள்ளங்களில் அகில் (frankincense) துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை தென் அராபியாவுக்கும் பட்டணம் பகுதிக்கும் இருந்த நெருங்கிய உறவை நிறுவுகிறது என்று முடிக்கிறார் செரியன்.

நன்றி: The Hindu, 28.10.2012

http://www.thehindu.com/news/national/potsherd-with-tamilbrahmi-script-found-in-oman/article4038866.ece

## முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகைக்கான எழுத்துத் தேர்வு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 2012-13 ஆம் கல்வியாண்டுக்கான முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வு மேற்கொள்வோருக்கு உதவித்தொகை வழங்குவதற்கான எழுத்துத் தேர்வு 09.11.2012 அன்று பிற்பகல் மாநிலக் கல்லூரியில் உள்ள புதிய தேர்வுக் கூடத்தில் நடைபெற்றது. இத்தேர்வில் முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகைக்கு 37 மாணவர்கள் தேர்வு எழுதினர். முனைவர் பட்ட ஆய்வு உதவித்தொகைக்கு 119 மாணவர்கள் தேர்வு எழுதினர்.

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழங்கிய ஆய்வு உதவித்தொகை விவரங்கள்

| ஆண்டு | முனைவர் பட்ட உதவித்தொகை | முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகை |
|---|---|---|
| 2009-10 | 35 | 6 |
| 2010-11 | 17 | 3 |
| 2011-12 | 32 | 3 |
| 2012-13 | 28 | 3 |

## செம்மொழித் தமிழியல் முதுகலைப் பட்டப் படிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் செம்மொழித் தமிழியல் முதுகலைப் பட்டப் படிப்பு ஒன்றினைத் திருவாரூரில் உள்ள தமிழ்நாடு நடுவண் பல்கலைக் கழகத்தில் தொடங்குவது என 201 ஆகஸ்டு 13 அன்று சென்னையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாகத் தேசிய அளவிலான பாடத்திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் கூட்டம் 2011 பிப்ரவரி 22 அன்று சென்னையில் கூட்டப்பட்டது. பல்துறை நோக்குடன் பன்மொழித் திறன்கள் உட்கொண்ட செம்மொழி இலக்கண இலக்கியக் கல்விக்கான முதுகலைப் பட்டப் படிப்புப் பாடத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த முதுகலைப் பட்டப் படிப்பைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2012 மார்ச் 28 அன்று நிறுவன இயக்குநராலும் பல்கலைக்கழகத் துணைவேந்தராலும் கையெழுத்திடப்பட்டது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இப்படிப்பில் சேர்கிற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் உரூ.3000/- உதவித்தொகையும் ஆண்டுதோறும் உரூ.2500/- பாடநூல்கள் வாங்குவதற்கான பொருளுதவியும் அளிக்க முன்வந்தது. தொகுப்பூதிய அடிப்படையில் இரு விரிவுரையாளர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டனர். மிகக் குறைந்த அளவிலான 7 மாணவர்களுக்கு வகுப்புகள் 2012 ஆகஸ்டு முதல் வாரத்தில் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

# 2008-09 ஆம் ஆண்டுக்கான குடியரசுத் தலைவர் விருது



தொல்காப்பியர் விருது
சி. கோவிந்தராசனார்



குறள்பீடம் விருது (அயல்நாட்டினர்)
பிரான்சுவா குரோ



இளம் அறிஞர் விருது
முனைவர் அ. இலட்சுமி தத்தை



இளம் அறிஞர் விருது
முனைவர் சு. மாதவன்



இளம் அறிஞர் விருது
முனைவர் மு. இராமகிருஷ்ணன்



இளம் அறிஞர் விருது
முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை

# பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம், சென்னை

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இயங்கிவந்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம், தரமணி சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டு, நூல்கள் உலகளாவிய பகுப்பு முறையான "டி. டி. சி." முறைப்படி வரிசைப்படுத்தி அடுக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கிய நூல்கள், ஆய்வேடுகள், இதழ்கள், குறுவட்டுகள் போன்றவற்றுக்குத் தனிப்பிரிவுகள் உள்ளன.







**நூலக இணையத்தில் நுழைய குறிமுறைக் கோட்டை திறன்பேசியில் *(Smart Phone)* வருடுக.**

## இணைய வழி நூலறிப்பட்டியல்




## வி. டி. எல். எஸ். வர்ச்சுவா முழுமையான நூலக முறைமை

நூலகத்தின் முழுமையான செயல்பாடுகளைத் தானியங்கும்படி மாற்றியமைக்கும் வகையில் "வி. டி. எல். எஸ். வர்ச்சுவா" என்ற நூலக முறைமைத் தரமணி வளாகத்தில் அமைக்கப்பட்டு, அதன்வழி இணையவழி நூலகப்பட்டியல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன வலைத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ் ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் இம்முறைமைத் தமிழிலேயே உள்ளது. இந்த வசதி தமிழகத்தில் சென்னை, இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ. ஐ. டி) மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நூலகத்தில் மட்டுமே உள்ளது.










### நூலகத்தைக் குறித்து அறிஞர்களின் கருத்துக்கள்

- பேரா. **அஸ்கோ பர்போலா,** எல்சிங்கி பல்கலைக்கழகம் : **தமிழ்மொழி எப்படி வியக்கத்தக்கதாக உள்ளதோ, அது போன்றே நூலகமும் உள்ளது.**
- பேரா. **செராகூலாவ் வாசெக்,** சார்லசு பல்கலைக்கழகம், பிராக் : **நல்ல நூல் நிலையம், ஆராய்ச்சிக்கு உதவியாக உள்ளது.**
- பேரா. **ச. வே. சுப்பிரமணியன்,** முன்னை இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் : **மிகச் சிறந்த பயனுடைய நூலகம், உலகத்தரம் வாய்ந்தது.**



நூலகச் சிறப்பு, வசதிகள், சேவைகளை அடுத்த இதழில் காண்க.

அமைவிடம் : தரமணி, சென்னை—113

# நிறுவன வெளியீடுகள்






























நூல்கள் கிடைக்குமிடம்

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
40, சாலைப் போக்குவரத்து வளாகம், 100 அடி சாலை
தரமணி, சென்னை – 113.

# குறுவட்டுக்கள்

| | |
|---|---|
| 1. பழந்தமிழ்ப் பாக்கள் மரபுவழிப் படித்தலும் பாடுதலும் - தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை | 50.00 |
| 2. தொல்காப்பியம் முற்றோதல் - ஐந்து தொகுதிகள் | 250.00 |
| 3. பத்துப்பாட்டு முற்றோதல் - ஐந்து தொகுதிகள் | 250.00 |
| 4. திருக்குறள் இசைத்தமிழ் - ஆறு தொகுதிகள் | 999.00 |
| 5. செம்மொழித் தமிழ்க் காட்சிக் குறும்படங்கள் - ஒன்பது தொகுதிகள் | 450.00 |

# பணிக்குழாம்

இயக்குநர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி
முனைவர் ந. தேவி
முனைவர் க. நர்மதா
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் சு. ஏழுமலை
முனைவர் மு. செல்வதுரை
முனைவர் சே. கரும்பாயிரம்
முனைவர் த. சரவணன்
முனைவர் இரா. வெங்கடேசன்
முனைவர் ந. பெரியசாமி

*முதுநிலை ஆய்வு வளமையர்கள்*

முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் ம. தமிழ்வாணன்
முனைவர் அ. ஆரோக்கியதாசு
முனைவர் மா. சுசிலா
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் சுப. வேல்முருகன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

முனைவர் வே. அழகுமுத்து
முனைவர். ம. நாகராஜன்
திருமதி ம. தாமரைச்செல்வி
திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்
திரு. கி. கண்ணன்
திரு. கோ. சந்திரசேகர்

*ஆராய்ச்சி உதவியாளர்*

முனைவர் சி. இராமச்சந்திரன்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*
திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*
முனைவர். இரா. அகிலன் *(நிரலாளர்)*
திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*
திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*
திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*
திரு. ஜா.வா. பாஸ்கரன்
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*
திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*
திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*
திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*
திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்
திருமதி சு. கீதா
திரு. தி.ஞா. அருள்ஒளி
திரு. மு. முனியசாமி
திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி. ந. ஜெயலட்சுமி
திருமதி. சி. அன்னபூரணி

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண்கீழ்க்கணக்கு**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**முத்தொள்ளாயிரம்**

**இறையனார் களவியல்**